பொத்தகத்தின் பெயர்—என்னும் தலைப்பில்,
கோசமு முறையு மிலேபமும் பொத்தகம்
சித்திரப் படமே பொத்தக மென்ப
என்றும் கொள்வர். ஆனால், இதன் முதலடி சில பிரதிகளில் இல்லை. (203)

### 1342. சித்திரத்தின் பெயர்

ஓவியம், வட்டிகை, துகிலிகை, என்று இவை
மேவிய **சித்திரம்** என்மனார் புலவர்.

**சித்திரத்தின் பெயர் :** (3)
1. ஓவியம், 2. வட்டிகை, 3. துகிலிகை.

**பாடவேறுபாடு—விளக்கம்**
1 : 4 மென்ன (204)

### 1343. எழுதலின் பெயர்

வரைதல், தீட்டல், பொறித்தல், இலேகை,
**எழுதற் பெயர்** என இயம்பினர் புலவர்.

**எழுதலின் பெயர் :** (4)
1. வரைதல், 2. தீட்டல், 3. பொறித்தல், 4. இலேகை

**பாடவேறுபாடு—விளக்கம்**
1 : 1 வரித்தல், 4. இரேகை.
இதன்பின் முதற் பதிப்பாசிரியர் சேர்த்த புது நூற்பா :

**இறுக்கலின் பெயர்**
173. ★ தற்ற விறுக்கல். (205)

### 1344. திவாகர வரலாறு

முன் தவப் பயனோ கற்ற அப் பயனோ,
சாபத்து இழுக்கிய தேவ சாதரில்
தோற்ற முடையன் என அம்பர்த் தோன்றிய
இயற்கைச் சேந்தன் திவாகரத்து ஏழாவது
**செயற்கை வடிவின் பெயர்த்தொகுதி** முற்றும்.

**பாடவேறுபாடு—விளக்கம்**
3 : 2—3 முடையன் அம்பர்த், 3—4 அம்பற் றோன்றிய
5 : 2 வடி ப், வடிவுப் (206)

எட்டாவது

## பண்பு பற்றிய பெயர்த்தொகுதி

எட்டாவது

# பண்பு பற்றிய பெயர்த்தொகுதி

## 1345. பண்பின்வகைப் பெயர்

வடிவின் அளவின் வண்ணத்தின் வரூஉம்
கடன்இயல் மரபின் காட்சிப் பொருளினும்
உணர்வில் புலப்படும் உண்மைப் பொருளினும்
பகர்குணத் தொடர்பு பண்புஎனப் படுமே.

**பண்பின் வகைப் பெயர் :** காட்சிப் பொருள் (4)

1. வடிவு, 2. அளவு, 3. வண்ணம், 4. உண்மைப் பொருள்—உணர்வில் புலப்படுவது.

**பாடவேறுபாடு—விளக்கம்**

வடிவினாலும் அளவினாலும் வண்ணத்தினாலும் கட்புலனுக்குப் புலனாகும் காட்சிப் பொருள்கள். மற்றும் கருத்தில் புலனாகும் பொருள்கள் ஆகியவற்றின் குணங்கள் பண்பு ஆம்.

தலைப்பு பண்பென்பன, பண்பென்னும் பெயர். (1)

## 1346. வட்டவடிவின் பெயர்

வலயம், நேமி, திகிரி, மண்டிலம்,
பருதி, ஆழி, பாண்டில், விருத்தம்,
கோளகை, கடகம், பாலிகை, கொம்மை,
தட்டு, வளையம், சக்கரம், சில்லி,
வட்ட வடிவிற்கு ஒட்டிய பெயரே.

**வட்டவடிவின் பெயர் :** (16)

1. வலயம், 2. நேமி, 3. திகிரி, 4. மண்டிலம், 5. பருதி, 6. ஆழி, 7. பாண்டில், 8. விருத்தம், 9. கோளகை, 10. கடகம், 11. பாலிகை, 12. கொம்மை, 13. தட்டு, 14. வளையம், 15. சக்கரம், 16. சில்லி.

பாடவேறுபாடு—விளக்கம்

2 : 1 பரிதி

4 : 2 வலையம், வலயம். (2)

### 1347. வளைவின் பெயர்

குடிலம், தட்டு, வாங்கல், குலாவல்,
கோட்டம், வணரே, வளாவல், வளைதல்.

வளைவின் பெயர் : (7)

1. குடிலம், 2. தட்டு, 3. வாங்கல், 4. குலாவல், 5. கோட்டம், 6. வணர், 7. வளாவல்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : வளைதலின் பெயர். (3)

### 1348. திரள்வடிவின் பெயர்

பந்தம். சேடு, கொம்மை, குவவு,
புஞ்சம், தொகுதி, சோகம், துறுமல்,
உண்டை, மாழை, குவிதல், கணை, குழியம்,
பிண்டம் ஏழிரண்டும் திரள்வடிவு என்ப.

திரள்வடிவின் பெயர் : (14)

1. பந்தம், 2. சேடு, 3. கொம்மை, 4. குவவு, 5. புஞ்சம், 6. தொகுதி, 7. சோகம், 8. துறுமல், 9. உண்டை, 10. மாழை, 11. குவிதல், 12. கணை, 13. குழியம். 14. பிண்டம்.

பாடவேறுபாடு—விளக்கம்

2 : 3 சோபந், சோமந். (4)

### 1349. குவிதற்பொருளின் பெயர்

குவையும், குவாலும், குப்பையும், இராசியும்
குலவும், குவிதற் பொருள ஆகும்.

குவிதற் பொருளின் பெயர் : (5)

1. குவை, 2. குவால், 3. குப்பை, 4. இராசி, 5. குவவு.



பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : குவிதலின் பெயர், குவிந்த வடிவின் பெயர். (5)

### 1350. தொகுதியின் பெயர்

தொழுதியும், மொய்யும், தோடும், குழுமலும்,
கருவியும், தொகுதிப் பெயர்கட் டுரைக்கும்.

தொகுதியின் பெயர் : (5)

1. தொழுதி, 2. மொய், 3. தோடு, 4. குழுமல், 5. கருவி. (6)

### 1351. துறுதலின் பெயர்

துறுவும், துற்றும், துறுதல் ஆகும்.

துறுதலின் பெயர் : (2)

1. துறு, 2. துற்று.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : துறுவலின் பெயர், துற்றலின் பெயர். (7)

### 1352. ஐம்மை வடிவின் பெயர்

அடரே, தகடுமுதல் ஐம்மை வடிவின.

ஐம்மை வடிவின் பெயர் : (1)

1. அடர்

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : அடரென்னும் பெயர், தகடு முதல் வடிவின் பெயர். (8)

### 1353. பரந்த வடிவின் பெயர்

படலை, படர்ச்சி, பரந்த வடிவின.

பரந்த வடிவின் பெயர் : (2)

1. படலை, 2. படர்ச்சி. (9)

1354. குமிழ்ப்புறு வடிவின் பெயர்

**குமிழ்ப்புறு வடிவே** புளகப் பெயர்க்கொடை.

**குமிழ்ப்புறு வடிவின் பெயர் :** (1)
புளகம்

**பாடவேறுபாடு—விளக்கம்**
தலைப்பு : புளகத்தின் பெயர். (10)

1355. மொக்குள் வடிவின் பெயர்

**மொக்குள் வடிவே** கொப்புளம் ஆகும்.

**மொக்குள் வடிவின் பெயர் :** (1)
கொப்புளம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**
தலைப்பு : கொப்புளத்தின் பெயர். (11)

1356. குழியத்தின் பெயர்

குழிசம், திரள், உண்டை, **குழியம்** ஆகும்.

**குழியத்தின் பெயர் :** (3)
1. குழிசம், 2. திரள், 3. உண்டை.

**பாடவேறுபாடு—விளக்கம்**
தலைப்பு : குழிசத்தின் பெயர், உண்டையின் பெயர் — அச்சுப்பிரதி
குழியுந் திரளுண்டைக் குரிய வாகும் —அச்சுப்பிரதி. (12)

1357. உட்டுளை வடிவின் பெயர்

தூம்பு, நாழி, புழை, **உட்டுளை வடிவின**
சுரையும் **உட்டுளை வடிவினது** ஆகும்.

**உட்டுளை வடிவின் பெயர் :** (4)
1. தூம்பு, 2. நாழி, 3. புழை, 4. சுரை.

**பாடவேறுபாடு—விளக்கம்**
2 : 3—4 வடிவின வாகும்.



அச்சுப்பிரதி இதனை இத்தலைப்பின் கீழ் இரண்டு நூற்பாவாகத் தந்துள்ளது. (13)

1358. துளையுடைப் பொருளின் பெயர்

புழையும் குழலும் **துளையுடைப் பொருளே.**

**துளையுடைப் பொருளின் பெயர் :** (2)
1. புழை, 2. குழல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**
1. புழலுங் (14)

1359. துவாரத்தின் பெயர்

சுரியும் மடையும் **துவாரம்** ஆகும்.

**துவாரத்தின் பெயர் :** (2)
1. சுரி, 2. மடை.

**பாடவேறுபாடு—விளக்கம்**
சுரிகையு (15)

1360. சர்ச்சரை வடிவின் பெயர்

பிணரே, **சர்ச்சரை வடிவின** ஆகும்.

**சர்ச்சரை வடிவின் பெயர் :** (1)
பிணர்.

**பாடவேறுபாடு—விளக்கம்**
தலைப்பு : சர்ச்சரவடிவின் பெயர்.
2 சற்சரை, 3—4 வடிவினதாகும். (16)

1361. கற்றை என்னும் பெயர்

கதிர்த்தொகுதி, மயிர்த்தொகுதி போல்வன **கற்றை.**

**கற்றை என்னும் பெயர் :** (2)
1. கதிர்த்தொகுதி, 2. மயிர்த்தொகுதி போல்வன.

**பாடவேறுபாடு—விளக்கம்**
தலைப்பு : கதிர்த்தொகுதி மயிர்த்தொகுதி போல்வனவற்றின் பெயர். (17)

## 1362. இடனுடைமையின் பெயர்

நாடு என் கிளவி **இடனுடைமை** ஆகும்.

**இடனுடைமையின் பெயர் :** (1)

நாடு. (18)

## 1363. பெருமையின் பெயர்

தடம், தடவு, விபுலம், வியலிகை, வியன், விறல்,
முடலை, அகலுள், மோடு, செம்மை,
பீடு, கண், பாழி, பின், முன்பு, மால், மா,
வந்தை, கலந்தை, பரி, பணை, அழுவம்,
பிறங்கல், படு, நனி, இயக்கம், வியம், தகை,
செம்மல், அணி, நன்று, அருமை, இருமை,
கருமை, கதழ்வு, கயவு, மூரி,
**பெருமை**, பாடும் அண்ணலும் அதற்கே.

**பெருமையின் பெயர் :** (39)

1. தடம், 2. தடவு, 3. விபுலம், 4. வியலிகை, 5. வியன், 6. விறல், 7. முடலை, 8. அகலுள், 9. மோடு, 10. செம்மை, 11. பீடு, 12. கண், 13. பாழி, 14. பின், 15. முன்பு, 16. மால், 17. மா, 18. வந்தை, 19. கலந்தை, 20. பரி, 21. பணை, 22. அழுவம், 23 பிறங்கல், 24. படு, 25. நனி, 26. இயக்கம், 27. வியம், 28. தகை, 29. செம்மல், 30. அணி, 31. நன்று, 32. அருமை, 33. இருமை, 34. கருமை, 35. கதழ்வு, 36. கயவு, 37. மூரி, 38. பாடு, 39. அண்ணல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

3 : 3—4 முன்புமால் மா, பின்முன்பு பரல்மா

4 : 1—2 வகந்தை கவந்தை

4 : 3 பரியணை. (19)

## 1364. பருமையின் பெயர்

பருஉவும் பீனமும் **பருமை** ஆகும்.



**பருமையின் பெயர் :** (2)

1. பருஉ, 2. பீனம். (20)

## 1365 சிறுமையின் பெயர்

இறை, அணு, வஞ்சம், சிறிது, சின்னம்,
வறிது, ஆசு என்பர் **சிறுமைப்** பெயரே.

**சிறுமையின் பெயர் :** (7)

1. இறை, 2. அணு, 3. வஞ்சம், 4. சிறிது, 5. சின்னம், 6. வறிது, 7. ஆசு.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1—2 இறையணு வஞ்சந் தன்றுதன்னஞ்
சிறிது சிறுமை சின்னம் வறிதா சென்ப.

2 : 1—2 வறிதா சென்ப

முதற்பதிப்புப் பாடம் :
இறையணு வஞ்சஞ் சிறிது சின்னம்
வறிதா சென்ப சிறுமை பின்னங்
கன்று கணந்தது விட்டிமை யற்பந்
தன்னமு மதற்கே சாற்றப் பெறுமே. (21)

## 1366. சிறிதின் பெயர்

கிலமே **சிறிது** ஆம்.

**சிறிதின் பெயர் :** (1)

கிலம். (22)

## 1367. முழுதின் பெயர்

அகிலம், **முழுதும்**.

**முழுதின் பெயர் :** (1)

அகிலம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : முழுவதின் பெயர்.

2 முழுவதும், முழுவதாகும்.

சிறிதுக்கும் முழுவதுக்கும் பெயர் என்னும் தலைப்பில் **1366, 1367** ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர்.

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் சேர்த்த ஒரு நூற்பா வருமாறு :

**மற்றுமுழுவதின் பெயர்**

174. ★ அகண்டஞ் சமத்த மடங்கல் யாவு
முடியவனைத் தெல்லா முற்றுமுழுவதா
மடைய வென்பது மதன்பாற் றாகும். (23)

## 1368. மிகுதியின் பெயர்

அமலை, உறு, தவ, நனி, உருப்பு, ஆற்றல்,
கழிவு,, விதப்பு, இறப்பு, கதழ்வு, கடுமை,
பெருமை, சிறப்பு, ஆன்றல், மதர்வு, பிறங்கல்,
அதிகப், புதுமை, கயவு, பரம், பொற்பு,
பொக்கம், பொம்மலொடு எழுமூன்று இரண்டும்
மிக்கோர் **மிகுதி** எனவிளம் பினரே.

**மிகுதியின் பெயர்** (23)

1. அமலை, 2. உறு, 3. தவ, 4. நனி, 5. உருப்பு, 6. ஆற்றல், 7. கழிவு, 8. விதப்பு, 9. இறப்பு, 10. கதழ்வு, 11. கடுமை, 12 பெருமை, 13. சிறப்பு, 14. ஆன்றல், 15. மதர்வு, 16. பிறங்கல், 17. அதிகம், 18. புதுமை, 19. கயவு, 20. பரம், 21. பொற்பு, 22. பொக்கம், 23. பொம்மல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

5 : 3—4 எழூமூ விரண்டும்

6 : மீக்கொளு. (24

## 1369. உயர்ச்சியின் பெயர்

உவப்பே, துங்கம், உன்னதம், மோடே,
நிவப்பே, சேணே, பிறங்கல், ஏந்தல்,



ஓங்கல், நிமிர்தல், புரை, உறை, ஈராறும்
பாங்கின் நல்லோர் **உயர்ச்சி** ஆகப் பகர்வர்.

**உயர்ச்சியின் பெயர் :** (12)

1. உலப்பு, 2. துங்கம், 3. உன்னதம், 4. மோடு, 5. நிவப்பு, 6. சேண், 7. பிறங்கல், 8 ஏந்தல், 9. ஓங்கல், 10. நிமிர்தல், 11. புரை, 12. உறை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1 : 1 உகப்பே

3 : 3 புரையிறை, புரைபரி. (25)

## 1370. தூரத்தின் பெயர்

சேணும் நீளிடையும் சேய்த்தும் **தூரம்.**

**தூரத்தின் பெயர் :** (3)

1. சேண், 2. நீளிடை, 3. சேய்த்து. (26)

## 1371. இடம்பாட்டின் பெயர்

விசாலம், விபுலம், **இடம்பாடு** ஆகும்.

**இடம்பாட்டின் பெயர் :** (2)

1. விசாலம், 2. விபுலம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

அச்சுப்பிரதித் தலைப்பும் மூலபாடமும் பின்வருமாறுள்ளது :

**விசாலத்தின் பெயர்**

விசாலம் விபுலம் விரிவிடம் பாடே (27)

## 1372. பரப்பின் பெயர்

பாய்தலும், ஞெமிர்தலும், பப்பும் **பரப்பும்,**
தாவுதலும், பரவையும் தழுவுதற்கு உரித்தே.

**பரப்பின் பெயர் :** (5)

1. பாய்தல், 2. ஞெமிர்தல், 3. பப்பு, 4. தாவுதல், 5. பரவை.

பாடவேறுபாடு—விளக்கம்

1 : 3—4 பம்பும் பரவையும்.

2 யாவுதலும் பரவையும் பரத்த லாகும்.

பரவலுந் தாவலு மழுவமும் பரப்பே
—அச்சுப்பிரதி. (28)

## 1373. கூடுதலின் பெயர்

கூடலும், குவிதலும், பயினியும், கூடுதல்.

**கூடுதலின் பெயர் :** (3)

1. கூடல், 2. குவிதல், 3. பயினி.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : கடலின் பெயர்.

கடல் குவிதல் பயினி சங்கம்—அச்சுப்பிரதி. (29)

## 1374. நீளத்தின் பெயர்

வார்தல், போகல், சேண், வரி, உறையே,
நீக்கம், தீர்தல், நேர்பாடு, ஒழுகல்,
நெடுமை, வடிதல் நெடில்இவை நீளம்.

**நீளத்தின் பெயர் :** (12)

1. வார்தல், 2. போகல், 3. சேண், 4. வரி, 5. உறை, 6. நீக்கம், 7. தீர்தல், 8. நேர்பாடு, 9. ஒழுகல், 10. நெடுமை, 11. வடிதல், 12. நெடில்.

பாடவேறுபாடு—விளக்கம்

1 : 2 போதல்

3 : 1 நிமிர்தல்

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் சேர்த்த புதுநூற்பா ஒன்று வருமாறு :

**செவ்வையின் பெயர்**

175. ★ செவ்வனு மிருசுஞ் செப்பமுஞ் செம்மையுஞ்
செவ்வைமற் றதற்கு நேருஞ் செப்புப. (30)



## 1375. நுண்மையின் பெயர்

நுவணை, ஒய்தல், நுழை, அயிர், நுணங்கு,
சாயல், நுணுகு, முளரி, நுணுக்கம்,
ஆய்தல், நிழற்றல், நொசிவு, நுனி, கூர்மை
ஆய எல்லாம் நுண்மை ஆகும்.

**நுண்மையின் பெயர் :** (14)

1. நுவணை, 2. ஒய்தல், 3. நுழை, 4. அயிர், 5. நுணங்கு, 6. சாயல், 7. நுணுகு, 8. முளரி, 9. நுணுக்கம், 10. ஆய்தல், 11. நிழற்றல், 12. நொசிவு, 13. நுனி, 14. கூர்மை.

பாடவேறுபாடு—விளக்கம்

1 : 2 நொய்வு

2 சாயன் முளரி நுணுகு நுணுக்கம்

4 : 1—2 ஆயவீ ரேழும். (31)

## 1376. அகலத்தின் பெயர்

அகறல், பாழி, ஆய்வு, பரப்பு, அகலுள்,
கண்ணறை, பாடு, ஆர், வியலிடம், ஆன்றல்,
பயன், நனவு, விரிவு, மேல், நளி, என்றுஇவை
அகலம் என்பர் அறிந்திசி னோரே.

**அகலத்தின் பெயர் :** (15)

1. அகறல், 2. பாழி, 3. ஆய்வு, 4. பரப்பு, 5. அகலுள், 6. கண்ணறை, 7. பாடு, 8. ஆர், 9. வியலிடம், 10. ஆன்றல், 11. பயன், 12. நனவு, 13. விரிவு, 14. மேல், 15. நளி.

பாடவேறுபாடு – விளக்கம்

1 : 3 அயர்வுபரப்

2 : 2 படர்தல், படாரம்

3 : 1—2 பயவுவிரிவு, பயனம் விரிவு. (32)

## 1377. சிறுகலின் பெயர்

அஃகலும், அருகலும், அவிதலும், குறைதலும்
சுருங்கலும், குன்றலும், **சிறுகல்** ஆகும்.

**சிறுகலின் பெயர் :** (6)

1. அஃகல், 2. அருகல், 3. அவிதல், 4. குறைதல், 5. சுருங்கல், 6. குன்றல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1 : 2—4 மமர்தலு மல்கலுங் குறைதலும்

1 : 3 இலகலமுங், விகலமுங். (33)

## 1378. உள்ளது சிறத்தலின் பெயர்

கூர்ப்பும், கழிவும் **உள்ளது சிறக்கும்.**

**உள்ளது சிறத்தலின் பெயர் :** (2)

1. கூர்ப்பு, 2. கழிவு.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : உள்ளதின் பெயர்

2 கழிப்பும். (34)

## 1379. மேன்மையின் பெயர்

கடவு, சாயல், சால்பு, மேம் பாடுஎன்று
உயர்வின் நான்கும் **மேன்மை** ஆகும்.

**மேன்மையின் பெயர் :** (4)

1. கயவு, 2. சாயல், 3. சால்பு, 4. மேம்பாடு.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : மென்மையின் பெயர்.

1 கயவு சாய்தல் சாய்வுமேம் பாடென்

2 றுயர்வு நான்கும் மென்மை யாகும். (35)



## 1380. செறிவின் பெயர்

விறப்பும், உறப்பும், வெறுப்பும், நளியும்,
செற்றலும், பொதுளலும், இங்கலும், இவர்தலும்,
துற்றும், சடிலமும், **செறிவு**எனச் சொல்வர்.

**செறிவின் பெயர் :** (10)

1. விறப்பு, 2. உறப்பு, 3. வெறுப்பு, 4. நளி, 5. செற்றல், 6. பொதுளல், 7. இங்கல், 8. இவர்தல், 9. துற்று, 10. சடிலம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1 : 2—3 மிறப்பு முறழ்ப்பும்

2 : 3 ஞெமுங்கலும்—அச்சுப்பிரதி.

3 : 1 துற்றலும். (36)

## 1381. மிடைதலின் பெயர்

துதைதலும், ததைதலும் **மிடைதல்** ஆகும்.

**மிடைதலின் பெயர் :** (2)

1. துதைதல், 2. ததைதல். (37)

## 1382. நிறைவின் பெயர்

மலிதல், மல்கல், மலர்தல், ஆர்தல்
தெகிழ்தல், துவன்றல், கெழுமல், தெவுளல்,
பழுதுஇல் **நிறைவின்** பால ஆகும்.

**நிறைவின் பெயர் :** (8)

1. மலிதல், 2. மல்கல், 3. மலர்தல், 4. ஆர்தல், 5. தெகிழ்தல், 6. துவன்றல், 7. கெழுமல், 8. தெவுளல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1 மலிதல் பெருகண் மல்க லார்தல்

2 : 2 துவன்றுதல்

2 : 4 தெவிளல், தெவுள்தல்.

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் சேர்த்த ஐந்து நூற்பாக்கள் வருமாறு :

**பாதியின் பெயர்**

176.★ பாலும் பயலு மருத்தமுங் கூறும்
பாகமும் பாதிப் பெயரெனப் பகர்வர்.

**பாரத்தின் பெயர்**

177.★ சீருங் குருவுங் கனமு ஞாட்பும்
பாரப் பால பொறையு மதற்கே.

**மென்மையின் பெயர்**

178.★ மிருது சுகுமார மென்மை மேன.

**நொய்ம்மையின் பெயர்**

179.★ இலகு நொவ்வு மிலேசு நொய்ம்மை,

**சலியா நிலையின் பெயர்**

180.★ துவஞ்சலி யாநிலை துருவமுஞ் சொல்ப. (38)

## 1383. அளவின்மையின் பெயர்

அபாரம், அனந்தம், அபரிமிதம், **அளவின்மை.**

**அளவின்மையின் பெயர் :** (3)

1. அபாரம், 2. அனந்தம், 3. அபரிமிதம். (39)

## 1384. ஐவகை வண்ணத்தின் பெயர்

செம்மையும், கருமையும் பொன்மையும், பசுமையும்,
வெண்மையும் **ஐவகை வண்ணத்தின் மேன.**

**ஐவகை வண்ணத்தின் பெயர் :** (5)

1. செம்மை, 2. கருமை, 3. பொன்மை, 4. பசுமை, 5. வெண்மை. (40)

## 1385. சிவப்பின் பெயர்

அரக்கு, செம்மை, துப்பு, துவர், சோணம்,
அரத்தம், சேது, பூவல், பாடலம்,



சிந்துரம், அத்து, படீரம், அருணம்,
சேந்து, செக்கர், குலிகம், சேப்பு என
வந்தபதி னேழும் **சிவப்பு**என அழைப்பர்.

**சிவப்பின் பெயர் :** (17)

1. அரக்கு, 2. செம்மை, 3. துப்பு, 4. துவர், 5. சோணம், 6. அரத்தம், 7. சேது, 8. பூவல், 9. பாடலம், 10. சிந்துரம், 11. அத்து, 12. படீரம், 13. அருணம், 14. சேந்து, 15. செக்கர், 16. குலிகம், 17. சேப்பு.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1 : 4 சோணிதம்

2 : 2 சேத்து

3 : 3 பாடீரம், செம்மல்

4 : 2—4 செக்கரிங் குலிகஞ் சேணமென. (41)

## 1386. பொன்நிறத்தின் பெயர்

பீதம், பிங்கலம், பொற்கெனல், **பொன்னிறம்.**

**பொன்னிறத்தின் பெயர் :** (3)

1. பீதம், 2. பிங்கலம், 3. பொற்கெனல். (42)

## 1387. குரால் நிறத்தின் பெயர்

கபிலம், **குரால்நிறம்.**

**குரால் நிறத்தின் பெயர் :** (1)
கபிலம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : கபில நிறத்தின் **பெயர்.** (43)

## 1388. புன்மை நிறத்தின் பெயர்

புகார், **புன்மை நிறமே.**

**புன்மை நிறத்தின் பெயர் :** (1)
புகார்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

குரால் நிறத்திற்கும் புன்மை நிறத்திற்கும் பெயர் என்னும் தலைப்பில் 1387, 1388 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர்.

அச்சுப் பிரதிப் பாடம் பின்வருமாறு :

**புகார் நிறத்தின் பெயர்**

கபிலங் குரானிறம் புகர்புற்கு மாமே. (44)

## 1389. வெண்மை நிறத்தின் பெயர்

வால், பால், சுவேதம், தவளப், **வெண்மை.**

**வெண்மை நிறத்தின் பெயர் :** (4)

1. வால், 2. பால், 3. சுவேதம், 4. தவளம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

அச்சுப்பிரதிப் பாடம் பின்வருமாறு :

வால்பால் சுவேதந் தவளம் பாண்டு
நரைவிளர் சுக்கிலங் குருகு வெண்மை. (45)

## 1390. பச்சை நிறத்தின் பெயர்

பாசும், பைம்மையும். சாமமும், பைத்தும்
பேசின் பசுமையும் சாமளமும் **பச்சை.**

**பச்சை நிறத்தின் பெயர் :** (6)

1. பாசு, 2. பைம்மை, 3. சாமம், 4. பைத்து, 5. பசுமை, 6. சாமளம். (46)

## 1391. கருமையின் பெயர்

காளிமம், களங்கம், கார், களம், நீலம்,
காளம், அஞ்சனம், கருள், மஞ்சு, மாலே,
காளகம் எனப்பதி னொன்றும் **கருமை.**



**கருமையின் பெயர் :** (11)

1. காளிமம், 2. களங்கம், 3. கார், 4. களம், 5. நீலம், 6. காளம், 7. அஞ்சனம், 8. கருள், 9. மஞ்சு, 10. மால், 11. காளகம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

2 : 3—4 கருள்கறை மாலே, கருள்கறை மாசொடு, மருள்மசி மாலே

3 : 1 கழகம். (47)

## 1392. மாசின் பெயர்

களங்கம், மலினம், கசடு, கறை **மாசே.**

**மாசின் பெயர் :** (4)

1. களங்கம், 2. மலினம், 3. கசடு, 4. கறை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : மாசு நிறத்தின் பெயர், களங்கத்தின் பெயர். (48)

## 1393. நிறத்தின் பொதுப்பெயர்

புகரே, மேனி, மாமை, கேழ், வண்ணம்,
குருவே, கொழுமை, கெழுவே, சந்தம்,
உரு எனப் பத்தும் **நிறத்தின் பொதுப்பெயர்.**

**நிறத்தின் பொதுப்பெயர் :** (10)

1. புகார், 2. மேனி, 3. மாமை, 4. கேழ், 5. வண்ணம், 6. குரு, 7. கொழுமை, 8. கெழு, 9. சந்தம். 10. உரு.

**பாடவேறுபாடு—விளக்கம்**

2 கருவே குருவே கொழுமை சந்தம். (49)

## 1394. ஒளியின் பெயர்

வில்லே, வாள், வெயில், நிலவு, கதிர், கிரணம்,
எல்லே, சேடி, சுடர், காணல், கெழு, நகை,

தாமம், விரியல், இலக்கம், நிழல், துளக்கம்,
வாமம், நீமம், ஒளிர், (வளர்) ஒளி ஆகும்.

**ஒளியின் பெயர் :** (20)

1. வில், 2. வாள், 3. வெயில், 4. நிலவு, 5. கதிர், 6. கிரணம், 7. எல், 8. சேடி, 9. சுடர், 10. கானல் 11. கெழு, 12. நகை, 13. தாமம், 14. விரியல், 15. இலக்கம், 16. நிழல், 17. துளக்கம், 18. வாமம், 19. நீமம், 20. ஒளிர்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

2 : 1—3 எல்லே தேசு செடிசுடர் கானல், 3. சுடர்கான், சுடர்கனல்,

4. கெழுநகை, கேழ்நகை,

4 : 2 நிகரொளிர், நிகழ்தொளிர். (50)

## 1395. ஒளிவிடுதலின் பெயர்

அலங்கல், சுடர்தல், அவிர்தல், இமைத்தல்,
வயங்கல், தயங்கல், ஒளிர்தல், நகுதல்,
இலங்கல் என ஒன்பதும் ஒளிவிடுதல் இசைக்கும்.

**ஒளிவிடுதலின் பெயர் :** (9)

1. அலங்கல், 2. சுடர்தல், 3. அவிர்தல், 4. இமைத்தல், 5. வயங்கல், 6. தயங்கல், 7. ஒளிர்தல், 8. நகுதல், 9. இலங்கல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1 : 3 விரிதல்

2 : 4 இலகுதல்

3 : 1—2 இயங்கலொன்பது, இயங்கலேவொன்பதும்.
(51)

## 1396. மிகச்சிவத்தலின் பெயர்

சேத்தலும், சேப்பும் மிகச்சிவத்தல் ஆகும்.



**மிகச்சிவத்தலின் பெயர் :** (2)

1. சேத்தல், 2. சேப்பு.

**பாடவேறுபாடு—விளக்கம்**

2 சிவப்பும். (52)

## 1397. கட்டழகின் பெயர்

ஏர், வனப்பு, எழில், யாணர், மாமை, தையல்,
காரிகை, தோட்டி, கவினே, விடங்கம்,
வாமம், வகுப்பு, ஒப்பு, மஞ்சு, பொற்பு,
காமர், அணி இவை கட்டழகு ஆகும்.

**கட்டழகின் பெயர் :** (17)

1. ஏர், 2. வனப்பு, 3. எழில், 4. யாணர், 5. மாமை, 6. தையல், 7. காரிகை, 8. தோட்டி, 9. கவின், 10. விடங்கம், 11. வாமம், 12. வகுப்பு, 13. ஒப்பு, 14. மஞ்சு, 15. பொற்பு, 16. காமர், 17. அணி.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1 : 3—4 மாமை கேழ் தையல். (53)

## 1398. அழகின் பெயர்

நவியே, அந்தம், மை, பூ, பை, பொலம்,
திவி, ஒண், மாண்பு, பதம், அழகு என்பர்.

**அழகின் பெயர் :** (10)

1. நவி, 2. அந்தம், 3. மை, 4. பூ, 5. பை, 6. பொலம், 7. திவி, 8. ஒண், 9. மாண்பு, 10. பதம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1 : 2 நவியந்த மைபூப் பொலஞ்செவ்வி யோணம்
ஏரணி யற்புதஞ் சித்திர மழகே.

1 : 1—2 திவியோண மாண்பு, திவியொண்மை மாண்பு

2 : 1—4 ஒண்மா ணற்புத மழகெனச் சாற்றுவர்

1—2 நவ்வி யந்தம்பை பூபோல மற்புதஞ்
செவ்வி யொண்மை மாண்பை சித்திர மழகே
—அச்சுப்பிரதி. (54)

## 1399. பேரழகின் பெயர்

விசித்திரம் பேரழகு.

**பேரழகின் பெயர் :** (1)
விசித்திரம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**
விசித்திரம் பேரழ கென்னல் வேண்டும்.
அழகுக்கும் பேரழகுக்கும் பெயர் என்னும் தலைப்பில்,
'சித்திர மழகே, விசித்திரம் பேரழகு' என்றும் சில பிரதிகளில் பாடம். (55)

## 1400. வடிவின் பெயர்

செண்ணம், வடிவே.

**வடிவின் பெயர் :** (1)
செண்ணம். (56)

## 1401. வண்ணத்தின் பெயர்

வண்ணம், சந்தம்.

**வண்ணத்தின் பெயர் :** (1)
சந்தம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**
வடிவுக்கும் வண்ணத்துக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1400, 1401 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சில பிரதிகள் கொண்டுள்ளன. (57)

## 1402. வலியின் பெயர்

மிடலே, உம்பல், ஆற்றல், வீரம்,
முடலை, பீடு, மள்ளல், மதுகை,



வாய்மை, மல்லல், தோற்றம், மதம், ஏறும்
மூரி, முடுகல், முரண், வயம், பாழி,
மைந்து, திண்மை, மீளி, துப்பு, ஊக்கம்,
ஏணே, நோன்மை, மொய்ம்பு, முன்பு,
வலம், தாவு, மானம், வலிப்பெயர் ஆகும்.

**வலியின் பெயர் :** (30)
1. மிடல், 2. உம்பல், 3. ஆற்றல், 4. வீரம், 5. முடலை, 6. பீடு, 7. மள்ளல், 8. மதுகை, 9. வாய்மை, 10. மல்லல், 11. தோற்றம், 12. மதம், 13. ஏறும், 14. மூரி, 15. முடுகல், 16. முரண், 17. வயம், 18. பாழி, 19. மைந்து, 20. திண்மை, 21. மீளி, 22. துப்பு, 23. ஊக்கம், 24. ஏண், 25. நோன்மை, 26. மொய்ம்பு, 27. முன்பு, 28. வலம், 29. தாவு, 30. மானம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**
1 : 1—2 விடலை யம்பல், பம்மல்,
6 : 3—4 முன்பு மொய்ம்பு
7 : 1—2 வலந்தான மானம்
7 ரைந்தாவு தான மான முரம்வலி
—அச்சுப்பிரதி. (58)

## 1403. மதர்த்தலின் பெயர்

மதர்வு, மதர்த்தல்.

**மதர்த்தலின் பெயர் :** (1)
மதர்வு.

**பாடவேறுபாடு—விளக்கம்**
1 [மதர்வை. (59)

## 1404. நொய்தாதலின் பெயர்

நொவ்வு, நொய்துஆதல்.

**நொய்தாதலின் பெயர் :** (1)

நொவ்வு.

**பாடவேறுபாடு—விளக்கம்**

*தலைப்பு :* நொய்தின் **பெயர்**

**1** நொய்வு

மதர்த்தலுக்கும் நொய்தாதலுக்கும் பெயர் **என்னும்** தலைப்பில் 1403, 1404 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பா வாகவும் சிலர் கொள்வர். (60)

## 1405. குறைபாட்டின் பெயர்

குறையே, நிரப்பே, ஈனம், **குறைபாடு.**

**குறைபாட்டின் பெயர் :** (3)

1. குறை, 2. நிரப்பு, 3. ஈனம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

*தலைப்பு :* குறையின் பெயர், குறைவின் பெயர்.

இந்நூற்பா குளிர்ச்சியின் பெயரை (1410) அடுத்துச் சில பிரதிகளில் காணப்படுகிறது. (61)

## 1406. தண்மையின் பெயர்

எண்மையும், தஞ்சமும், தன்மையும், எளிமையும், வெண்மையும், வெளிறும், **தண்மை** ஆகும்.

**தண்மையின் பெயர் :** (6)

1. எண்மை, 2. தஞ்சம், 3. தன்மை, 4. எளிமை, 5. வெண்மை, 6. வெளிறு.

**பாடவேறுபாடு—விளக்கம்**

*தலைப்பு :* எளிமையின் பெயர்.

இந்நூற்பாவை இருவேறு தலைப்பில் பின்வருமாறு பாடம் கொள்வர் சிலர்.

**எளிமையின் பெயர்**

எண்மையுந் தஞ்சமு மெளிமை யாகும்.



**தண்மையின் பெயர்**

வெண்மையும் வெளிறுந் தண்மை யாகும்.

அச்சுப்பிரதிப் பாடம் பின்வருமாறு :

**எளிமையின் பெயர்**

எண்மையுந் தஞ்சமுந் தண்மையு மெளிமை.

**புல்லறிவின் பெயர்**

வெண்மையும் வெளிறுந் தண்மையும் புல்லறிவு.

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் சேர்த்த புது நூற்பா :

**மற்றும் புல்லறிவின் பெயர்**

**181.** ★ புல்லறி விற்குப் புகல்பசிற் றறிவும். (62)

## 1407. இழிதகவின் பெயர்

இழிவே, பரிபவம், **இழிதகவு** ஆகும்.

**இழிதகவின் பெயர் :** (2)

1. இழிவு, 2. பரிபவம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

*தலைப்பு :* இழிவின் பெயர், இழித்தகவின் பெயர்.

3 இழித்தகவு. (63)

## 1408. மானம் என்னும் பெயர்

மானம் பெருந்தன்மை, குற்றப்பாடும் வரையார்.

**மானம் என்னும் பெயர் :** (2)

1. பெருந்தன்மை, 2. குற்றப்பாடு.

**பாடவேறுபாடு—விளக்கம்**

*தலைப்பு :* மானம் என்னும் சொற்பொருட்பெயர், மானத்தின் பெயர். (64)

## 1409. வெப்பத்தின் பெயர்

அழலே, உருப்பம், **வெப்பம்** ஆகும்.

**வெப்பத்தின் பெயர் :** (2)

1. அழல், 2. உருப்பம். (65)

## 1410. குளிர்ச்சியின் பெயர்

சீதளம், நளியே, சீதம், தண், **குளிர்ச்சி.**

**குளிர்ச்சியின் பெயர் :** (4)

1. சீதளம், 2. நளி, 3. சீதம், 4. தண்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

இதனை அடுத்து குறைபாட்டின் பெயர் (1405) சில பிரதிகளில் காணப்படுகிறது. (66)

## 1411. வீரத்தின் பெயர்

விறலே, கொற்றம், **வீரம்** ஆகும்.

**வீரத்தின் பெயர் :** (2)

1. விறல், 2. கொற்றம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

2 வெற்றம், வெற்றி. (67)

## 1412. வென்றியின் பெயர்

வலனே, கொற்றம், மாடு, வாகை,
விசயம், புகல் என ஆறும் **வென்றி.**

**வென்றியின் பெயர் :** (6)

1. வலன், 2. கொற்றம், 3. மாடு, 4. வாகை, 5. விசயம், 6. புகல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

2 : 1—2 விசையம் புகழென. (68)



## 1413. தோல்வியின் பெயர்

தொலைவு, நிலையழிவு, தோற்றல், **தோல்வி.**

**தோல்வியின் பெயர் :** (3)

1. தொலைவு, 2. நிலையழிவு, 3. தோற்றல். (69)

## 1414. அளவின் பெயர்

தாறு, கால், மாத்திரை, வரை, துணை, நேரம்,
காறு, பரிமாணம், அவதி, **அளவு** ஆகும்.

**அளவின் பெயர் :** (9)

1. தாறு, 2. கால், 3. மாத்திரை, 4. வரை, 5. துணை, 6. நேரம், 7. காறு, 8. பரிமாணம், 9. அவதி.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1 : 1 தாறுகரணம். (70)

## 1415. எல்லையின் பெயர்

ஏணியும், வரைப்பும், வரம்பும், **எல்லை.**

**எல்லையின் பெயர் :** (3)

1. ஏணி, 2. வரைப்பு, 3. வரம்பு. (71)

## 1416. வரையறையின் பெயர்

அளவு, நிறை, எண், **வரையறை** ஆகும்.

**வரையறையின் பெயர் :** (3)

1. அளவு, 2. நிறை, 3. எண் (72)

## 1417. கச்சம் என்னும் பெயர்

**கச்சம்,** அளவையும், கடனும் ஆகும்.

**கச்சம் என்னும் பெயர் : (2)**

1. அளவை, 2. கடன்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : அளவையின் பெயர். (73)

## 1418. கூறுபாட்டின் பெயர்

வகையும், திறனும், கூறுபாடு ஆகும்.

**கூறுபாட்டின் பெயர் : (2)**

1. வகை, 2. திறன். (74)

## 1419. முதிர்ச்சியின் பெயர்

தெட்பம், முதிர்ச்சி.

**முதிர்ச்சியின் பெயர் : (1)**

தெட்பம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : அறிவு முதிர்ச்சியின் பெயர்

தெட்ட மறிவின் முதிர்ச்சி.

2 முதிர் திரட்சி. (75)

## 1420. முதுக்குறைவின் பெயர்

ஒட்பம், முதுக்குறைவே.

**முதுக்குறைவின் பெயர் : (1)**

ஒட்பம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

2 முதுக்குறைவு.

'முதுக்குறைவு பேரறிவு முகிய மாகும்' என்றும், 'முகரிகை யோட்ட முதுக்குறைவு பேரறிவு' என்றும் பாட வேறுபாடு காணப்படுகிறது.

முதிர்ச்சிக்கும் முதுக்குறைவுக்கும் பெயர் என்னும் தலைப்பில், 1419, 1420 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாக



வும் சில ஏடுகள் கொண்டுள்ளன. இந்நூற்பாவை 'முதுக் குறைவின் பெயர்' என்னும் தலைப்பில் அச்சுப்பிரதி தந்துள்ளது. (76)

## 1421. அறிவின் பெயர்

உரனே, காட்சி, உணர்வே, ஒண்மை,
புலனே, ஞானம், அறிவுஎனப் புகல்வர்.

**அறிவின் பெயர் : (6)**

1. உரன், 2. காட்சி, 3. உணர்வு, 4. ஒண்மை, 5. புலன், 6. ஞானம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1 : 4 யுண்மை. (77)

## 1422. கருத்தின் பெயர்

எண்ணல், பேணல், ஏடல், சேத்து,
கண்ணுதல், குறிப்பு, விரும்பல், வினையே,
உன்னல், மதமே, இங்கிதம், சிந்தை,
வன்மை, மெய்ம்மை, ஏமாப்பு, உள்ளல்,
கவிஞர், எண்ணிரண்டும் கருத்துஎனக் கருதுவர்.

**கருத்தின் பெயர் : (16)**

1. எண்ணல், 2. பேணல், 3. ஏடல், 4. சேத்து, 5. கண்ணுதல், 6. குறிப்பு, 7. விரும்பல், 8. வினை, 9. உன்னல், 10. மதம், 11. இங்கிதம், 12. சிந்தை, 13. வன்மை, 14. மெய்ம்மை, 15. ஏமாப்பு, 16. உள்ளல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1 : 3 ஏடல், 4. செத்து.

2 : 1—3 கண்ணல் நுதலல் குறிப்பு வீரும்பல்

3 : 2 அகமே

4 : 1 உவமை, வண்மை. (78)

## 1423. கருதுதலின் பெயர்

கண்ணல், நுதலுதல், புகறல், கருதுதல்.

**கருதுதலின் பெயர் : (3)**

1. கண்ணல், 2. நுதலுதல், 3. புகறல். (79)

## 1424. நல்லறிவின் பெயர்

ஞானமும் சிலமும் **நல்லுணர்வு** ஆகும்.

**நல்லறிவின் பெயர் : (2)**

1. ஞானம், 2. சீலம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : நல்லுணர்வின் பெயர். (80)

## 1425. விருப்பத்தின் பெயர்

மாதர், காதல், ஆதரவு, ஆர்வம்,
காமர், வெப்பம், பற்றே, காமம்,
வீழ்தல், வேட்கை, தாழ்தல், வெஃகல்,
நசையே, நம்பு, மேவு, நயப்பு,
பிணையே, பேணல், பெட்பே, பெட்டல்,
இவறல், அவாவே, இவர்தல், கவர்தல்,
விழைவே **விருப்பின் பொருட்கட் டுரையே.**

**விருப்பத்தின் பெயர் : (25)**

1. மாதர், 2. காதல், 3. ஆதரவு, 4. ஆர்வம், 5. காமர், 6. வெப்பம், 7. பற்று, 8. காமம், 9. வீழ்தல், 10. வேட்கை, 11. தாழ்தல், 12. வெஃகல், 13. நசை, 14. நம்பு, 15. மேவு, 16. நயப்பு, 17. பிணை, 18. பேணல், 19. பெட்பு, 20. பெட்டல், 21. இவறல், 22. அவா, 23. இவர்தல், 24. கவர்தல், 25. விழைவு.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : விருப்பின் பெயர்.

3 : 2 நட்பு

5 : 1 இவத்தல்



6 : 2—4 விருப்பென விளம்பினர் புலவர்.

இதன்பின் முதற்பதிப்பாசிரியர் சேர்த்த இரண்டு புது நூற்பாக்கள் வருமாறு :

**அவாவின்மையின் பெயர்**

182. ★ வெறுப்பொல் லாமை வேண்டாமை முனைவொடு
உவர்ப்பறுத் திடல், மா உரைப்ப வவா இன்மை.

**அமையுமென்றலின் பெயர்**

183. ★ அலமென் கிளவி யமையு மென்றல். (81)

## 1426. அன்பின் பெயர்

பரிவும், ஆர்வமும், ஈரமும், பற்றும்,
அளியும், நாரும், பரிவும், **அன்பே.**

**அன்பின் பெயர் : (7)**

1. பரிவு, 2. ஆர்வம், 3. ஆரம், 4. பற்று, 5. அளி, 6. தார், 7. பரிவு.

**பாடவேறுபாடு—விளக்கம்**

இதன்பின் முதற்பதிப்பாசிரியர் சேர்த்த புதுநூற்பா ஒன்று வருமாறு :

**எழுமையும் தொடர்ந்த அன்பின் பெயர்**

184. ★ உழுவ லெழுமையுந் தொடர்ந்தவன் புரைக்கும். (82)

## 1427. இரக்கத்தின் பெயர்

அருளும், கருணையும் **இரக்கம்** ஆகும்.

**இரக்கத்தின் பெயர் : (2)**

1. அருள், 2. கருணை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் சேர்த்த புது நூற்பா :

**மனத்தின் பெயர்**

**185.** ★ உன்ன மகஞ்சித்த முள்ள மிதயம்
முன்னம் நெஞ்சு மொழிப மனக்கே. (83)

## 1428. ஒருதலைக் காமத்தின் பெயர்

கைக்கிளை, **ஒருதலைக் காமம்** ஆகும்.

**ஒருதலைக் காமத்தின் பெயர்** : (1)
**கைக்கிளை.** (84)

## 1429. வழுவுடைக் காமத்தின் பெயர்

பெருந்திணை, **வழுவுடைக்காமத்தின்** பெயரே.

**வழுவுடைக் காமத்தின் பெயர்** : (1)
**பெருந்திணை.**

**பாடவேறுபாடு—விளக்கம்**

**தலைப்பு** : பொருந்தாக் காமத்தின் பெயர்.

**2-4** வழுவுடைக் காமத்துப் பெயரே, வழுவுடைக் காமப் பெயரே, வழுவுடைக் காமமாகும், யென்பது வழுவுடைக் காமம். (85)

## 1430. அன்புடைக் காமத்தின் பெயர்

ஐந்திணை உடையது **அன்புடைக் காமம்.**

**அன்புடைக் காமத்தின் பெயர்** : (1)
**ஐந்திணை.** (86)

## 1431. காமத்தின் பெயர்

மதனம் **காமம்.**

**காமத்தின் பெயர்** : (1)
**மதனம்.** (87)



## 1432. காமக் கவலையின் பெயர்

விரகம், **காமக் கவலை.**

**காமக் கவலையின் பெயர்** : (1)
விரகம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

காமத்துக்கும் காமக் கவலைக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1431, 1432 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். (88)

## 1433. வேட்கைப் பெருக்கத்தின் பெயர்

வேணவா என்பது **வேட்கைப் பெருக்கம்.**

**வேட்கைப் பெருக்கத்தின் பெயர்** : (1)
வேணவா. (89)

## 1434. தக்கதின் பெயர்

தகவும் தகுதியும் **தக்க** ஆகும்.

**தக்கதின் பெயர்** : (2)
1. தகவு, 2. தகுதி.

**பாடவேறுபாடு—விளக்கம்**

**3—4** தக்க தாகும். (90)

## 1435. மாட்சிமையின் பெயர்

மாணே, மாண்டல், **மாட்சிமை** ஆகும்.

**மாட்சிமையின் பெயர்** : (2)
1. மாண், 2. மாண்டல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

**தலைப்பு** : மாட்சிமையின் பெயர்.

**3—4** மாட்சி யாகும். (91

## 1436. சால்பின் பெயர்

ஆன்றலும், சால்பும், நிறைவும், அமைதியும்
வாய்ந்த மாட்சியும் அவ்வயின் வரையார்.

**சால்பின் பெயர் : (4)**

1. ஆன்றல், 2. நிறைவு, 3. அமைதி, 4. மாட்சி

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : நிறையின் பெயர், அமைதியின் பெயர்.

1 : 3—4 அமைவு நிறைவு

2 : 1—4 வாய்ந்த காட்சியு மிவையும் வரையார்.

வாய்த்தலுஞ் செழுமையும் வளமும் வரையார்
—அச்சுப்பிரதி.

மாட்சியின் பெயர் என்னும் தலைப்பில் 1435, 1436 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் கொள்வதுண்டு. (92)

## 1437. சினத்தின் பெயர்

சினம், மறம், முனிவு, செயிர், கறுவு, சீற்றம்,
வெகுளி, கதம், வைரம், வேரம், செற்றம்.

**சினத்தின் பெயர் : (10)**

1. மறம், 2. முனிவு, 3. செயிர், 4. கறுவு, 5. சீற்றம், 6. வெகுளி, 7. கதம், 8. வைரம், 9. வேரம், 10. செற்றம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1 : 3 செயிர் கறுபு

2 : 2—3 வயிரம் வேகம். (93)

## 1438. சினக்குறிப்பின் பெயர்

கறுப்பு, சிவப்பு, கனுறல், கன்றல்,
வியர்ப்பு, புழுங்கல், புகைதல், வெய்துறல்,
சினக் குறிப்பில் தெரிக்கும் கிளவி.



**சினக்குறிப்பின் பெயர் : (8)**

1. கறுப்பு, 2. சிவப்பு, 3. கனுறல், 4. கன்றல், 5. வியர்ப்பு, 6. புழுங்கல், 7. புகைதல், 8. வெய்துறல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

சினத்தின் பெயர் என்னும் தலைப்பிலேயே 1437, 1438 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சில பிரதிகள் கொண்டுள்ளன.

இதன் பின் முதற்பதிப்பாசிரியர் சேர்த்த மூன்று நூற்பாக்கள் வருமாறு :

**முன்கோபத்தின் பெயர்**

186. ★ கோம்பல் வெம்பல் கொந்தன்முன் கோபங்
கனிதலு மதற்கே கழற லாகும்.

**பெருங்கோபத்தின் பெயர்**

187. ★ உருத்தல் சீற லுலறன் முனைத
லுடற்றல் காய்தல்விடைத்தறீ விரத்தொடு
தொடுத்த வெட்டும் பெருத்த கோபம்.

**வைரத்தின் பெயர்**

188. ★ செற்றஞ் சலம்பவந் தொந்தம் வேர
முற்ற வைர மொழியுங் கிளவி. (94)

## 1439. அதிசயத்தின் பெயர்

வியப்பு, இறும்பூது, விம்மிதம், விபரீதம்,
அச்சோ ஐந்தும் அதிசயம் ஆகும்.

**அதிசயத்தின் பெயர் : (5)**

1. வியப்பு, 2. இறும்பூது, 3. விம்மிதம், 4. விபரீதம், 5. அச்சோ.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : அதிசயப் பெயர்.

1 : 4 விபரிதம்

2 : 1—4 மிலைச்சென் றைந்து மதிசய மாகும்,
மிலைச்சச் சோவென வாறு மதிசயம்.

2 : 1 சைச்சோவென, 3—4 மாரு மதிசயம். (95)

## 1440. அதிசயத்துக்கும் இரக்கத்துக்கும் பெயர்

அய்யோ, அந்தோ, அன்னோ, ஆ, ஓ எனும்
இவ்வும்அதி சயம்,உறல் இரங்கற்கும் உரிய.

**அதிசயத்துக்கும் இரக்கத்துக்கும் பெயர் : (5)**

1. அய்யோ, 2. அந்தோ, 3. அன்னோ, 4. ஆ 5. ஓ.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : அதிசயத்துக்கும் இரங்கற்கும் பெயர்,
அதிசயமுற இரங்குதலின் பெயர்.

1 : 1 ஐயோ

2 என்னுமில் வதிசயமுற விரங்கற்கு முரிய
— அச்சுப்பிரதி.

3 : 4 இரங்கற்கு முரித்தே. (96)

## 1441. கண்ணோட்டத்தின் பெயர்

நயம், புணர்வு, நாகரிகம், கேண்மை, கண்ணோட்டம்.

**கண்ணோட்டத்தின் பெயர் : (4)**

1. நயம், 2. புணர்வு, 3. நாகரிகம், 4. கேண்மை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

2 : 1 நயப்புணர்வு. (97)

## 1442. உள்ளக்களிப்பின் பெயர்

மதர்ப்பு, பெருமிதம், பாடவம், மத்தம்,
செருக்கு, மதம், உள்ளக் களிப்பின் திறத்த.

**உள்ளக்களிப்பின் பெயர் : (6)**

1. மதர்ப்பு, 2. பெருமிதம், 3. பாடவம்,
4. மத்தம், 5. செருக்கு, 6. மதம். (98)

## 1443. கருதுதலின் பெயர்

சுட்டலும், குறித்தலும், கருதுதல் ஆகும்.



**கருதுதலின் பெயர் : (2)**

1. சுட்டல், 2. குறித்தல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : நன்கு மதித்தலின் பெயர். (99)

## 1444. அழுக்காற்றின் பெயர்

அழுக்காறு, மனச்சழுக்கம், அவ்வியம், மனக்கோட்டம்.

**அழுக்காற்றின் பெயர் : (3)**

1. மனச்சழுக்கம், 2. அவ்வியம், 3. மனக்கோட்டம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : மனக்கோட்டத்தின் பெயர், பொறாமையின் பெயர், மனச்சழுக்கத்திற்கும் மனக்கோட்டத்திற்கும் பெயர்.

3 ஔவியம்

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் சேர்த்த புது நூற்பா :

**மற்றுமழுக்காற்றின் பெயர்**

189. ★ கூரம் பொறாமை நோனாமையு மழுக்காறு.

இதன் பின்னர், 'மனக்கோட்டத்தின் பெயர்' என்னும் தலைப்பில், 'ஔவியம் மனக்கோட்டம்' என அச்சுப் பிரதியில் காணப்படுகிறது. (100)

## 1445. மறப்பின் பெயர்

இழுக்கு, சோர்வு, பொச்சாப்பு, இகழ்ச்சி,
வழுக்கு, மறல், மறவி, மறத்தல் ஆகும்.

**மறப்பின் பெயர் : (7)**

1. இழுக்கு, 2. சோர்வு, 3. பொச்சாப்பு,
4. இகழ்ச்சி, 5. வழுக்கு, 6. மறல், 7. மறவி.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : மறத்தலின் பெயர்

1 : 4 இகட்சி. (101)

## 1446. கொடுமையின் பெயர்

**கோரம், சண்டம், கடினம், கடுமை,**
**கூரம், கொடுமை ஆம்எனக் கூறுவர்.**

**கொடுமையின் பெயர் :** (5)

1. கோரம், 2. சண்டம், 3. கடினம், 4. கடுமை, 5. கூரம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1 : 4 கொடுமை

2 : 2 கடுமை. (102)

## 1447. உள்ளமிகுதியின் பெயர்

**ஊக்கமும், உரனும், உள்ளமிகுதி.**

**உள்ளமிகுதியின் பெயர் :** (2)

1. ஊக்கம், 2. உரன்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1 ஊக்கும். (103)

## 1448. இறுமாப்பின் பெயர்

**இறுமாப்பு, ஏக்கழுத்தம்.**

**இறுமாப்பின் பெயர் :** (1)

ஏக்கழுத்தம். (104)

## 1449. அகமலர்ச்சியின் பெயர்

**செம்மாப்பு, அகமலர்ச்சி.**

**அகமலர்ச்சியின் பெயர் :** (1)

செம்மாப்பு.

**பாடவேறுபாடு—விளக்கம்**

இறுமாப்புக்கும் அகமலர்ச்சிக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1448, 1449 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். (105)



## 1450. பேரறிவின் முதிர்ச்சியின் பெயர்

**முதுக்குறைவு பேரறிவின் முதிர்ச்சி ஆகும்.**

**பேரறிவின் முதிர்ச்சியின் பெயர் :** (1)

முதுக்குறைவு.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : முதுக்குறைவு என்னும் சொற்பொருட் பெயர், பேரறிவின் பெயர், பேரறிவின் முக்கியத்தின் பெயர்.

3—4 முக்கிய மாகும், முதுமை யாகும். (106)

## 1451. கொடுமையின் பெயர்

**கோணே, கொடுமை.**

**கொடுமையின் பெயர் :** (1)

கோண்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : கூனின் பெயர். (107)

## 1452. நிலையுடைமையின் பெயர்

**ஏணே, நிலையுடைமை.**

**நிலையுடைமையின் பெயர் :** (1)

ஏண்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

கொடுமைக்கும் நிலையுடைமைக்கும் பெயர் அல்லது கோணுக்கும் ஏணுக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1451, 1452 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகச் சில பிரதிகள் கொண்டுள்ளன.

"ஏணே நிலையுடைமை நிலையின்மை வம்பே"

என்று மாற்றுப்பாடமும் ஒரு சில பிரதிகளில் உண்டு. (108)

## 1453. நாணத்தின் பெயர்

மானமும், வெள்கலும், வட்கலும், சமழ்ப்பும்
**நாணம்** உணர்த்தும் நடைய வாகும்.

**நாணத்தின் பெயர் : (4)**
1. மானம், 2. வெள்கல், 3. வட்கல், 4. சமழ்ப்பு. **(109)**

## 1454. மதித்தலின் பெயர்

பேணலும், கருதலும், **மதித்தல்** ஆகும்.

**மதித்தலின் பெயர் : (2)**
1. பேணல், 2. கருதல். **(110)**

## 1455. தீதின் பெயர்

ஊறும், கோளும், **தீது** ஆகும்மே.

**தீதின் பெயர் : (2)**
1. ஊறு, 2. கோள்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் சேர்த்த புது நூற்பா :

**மற்றுந் தீதின் பெயர்**

190.★ அந்தரா யந்தீங் கலாபமுட் டுப்பா
டந்தரம் விக்கினங் தட்டுந் தீதாம். **(111)**

## 1456. இன்பத்தின் பெயர்

நயனும், மகிழ்வும், நகையும், **இன்பம்.**

**இன்பத்தின் பெயர் : (3)**
1. நயன், 2. மகிழ்வு, 3. நகை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் சேர்த்த புது நூற்பா :



**மற்றுமின்பத்தின் பெயர்**

191.★ ஏமமு மதற்கே யியம்புங் கிளவி. **(112)**

## 1457. தளர்வின் பெயர்

ஏட்டை **தளர்வே.**

**தளர்வின் பெயர் : (1)**
ஏட்டை.

**பாடவேறுபாடு — விளக்கம்**

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் சேர்த்த புது நூற்பா :

**மற்றுந் தளர்ச்சியின் பெயர்**

192.★ அசாவென் கிளவியுந் தளர்ச்சிக் கறைப. **(113)**

## 1458. குறிப்பின் பெயர்

நாட்டியம், **குறிப்பே.**

**குறிப்பின் பெயர் : (1)**
நாட்டியம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தளர்வுக்கும் குறிப்புக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1457, 1458 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். **(114)**

## 1459. சுழற்சியின் பெயர்

அலமரல், கொட்பு, கறங்கு, சுழல்வு,
தெருமரல், **சுழற்சி,** ஆம் எனச் செப்புவர்.

**சுழற்சியின் பெயர் : (5)**
1. அலமரல், 2. கொட்பு, 3. கறங்கு, 4. சுழல்வு, 5. தெருமரல். **(115)**

## 1460. இரங்கலின் பெயர்

இனைதல், எற்றித்தல், **இரங்கல்** ஆகும்.

**இறங்கலின் பெயர் :** (2)
1. இனைதல், 2. எற்றித்தல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**
2—3 எறிதல் இரங்குதல். (116)

## 1461. ஐயத்தின் பெயர்

கொல்லே, மானுதல், அனுமானம், ஆசங்கை,
**ஐயம்** என்பர் அறிந்திசி னோரே.

**ஐயத்தின் பெயர் :** (4)
1. கொல், 2. மானுதல், 3. அனுமானம்,
4. ஆசங்கை. (117)

## 1462. இகழ்ச்சியின் பெயர்

எள்ளல், நகை, இகழ்வு, உவர்ப்பு, ஒல்லாமை, **இகழ்ச்சி.**

**இகழ்ச்சியின் பெயர் :** (5)
1. எள்ளல், 2. நகை, 3. இகழ்வு, 4. உவர்ப்பு,
5. ஒல்லாமை. (118)

## 1463. நன்மையின் பெயர்

வண்ணம், மணி, சீர், மாண், நலம், மாசறல்,
நன்னர் நறு உறுதி நயம் என்று
இன்னவை **நன்மைக்கு** எய்தும் பெயரே.

**நன்மையின் பெயர் :** (10)
1. வண்ணம், 2. மணி, 3. சீர், 4. மாண்,
5. நலம், 6. மாசறல், 7. நன்னர், 8. நறுமை,
9. உறுதி, 10. நயம்.



**பாடவேறுபாடு—விளக்கம்**
1 : 1 அண்ணம், 3. மாணல், யாணர், மண்ணல்,
2 : 4 நயனெண். (119)

## 1464. அகமகிழ்ச்சியின் பெயர்

ஆனந்தம், இன்பம், **அகமகிழ்ச்சி** ஆகும் ;
தொய்யலும் கட்டியும் அப்பெயர் சிவணும்.

**அகமகிழ்ச்சியின் பெயர் :** (4)
1. ஆனந்தம், 2. இன்பம், 3. தொய்யல், 4. கட்டி.

**பாடவேறுபாடு—விளக்கம்**
1 : 3 அகமலர்ச்சி
2 : 1 தொய்யிலும்
இதனை இருநூற்பாவாக முதற்பதிப்பு அமைத்துள்ளது. (120)

## 1465. உவகையின் பெயர்

ஓகை, மாராயம், **உவகை** ஆகும்.

**உவகையின் பெயர் :** (2)
1. ஓகை, 2. மாராயம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**
இதன் பின்னர் முதற்பதிப்பாசிரியர் சேர்த்த மூன்று புது நூற்பாக்கள் வருமாறு :

**நிச்சயத்தின் பெயர்**
193. ★ தீர்க்கமுந் தரிப்புந் தேறு நிச்சய
மன்றவென் கிளவியும் வகுப்ப வதற்கே.

**ஆக்கத்தின் பெயர்**
194. ★ நந்த லாக்கம்.

**பெயரின் பெயர்**
195. ★ நாம மபிதான நாட்டும் பெயரே. (121)

## 1466. அறியாமையின் பெயர்

எய்யாமை, அறியாமை ஆகும் என்ப.

**அறியாமையின் பெயர் :** (1)

எய்யாமை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் சேர்த்த புது நூற்பா ஒன்று உளது.

**மற்றுமறியாமையின் பெயர்**

196. ★ மருட்சி மடம் பேதைமை மற்று மறியாமை. (122)

## 1467. அறிவின் திரிவின் பெயர்

துய என் கிளவி அறிவின் திரிவே.

**அறிவின் திரிவின் பெயர் :** (1)

துயவு.

**பாடவேறுபாடு—விளக்கம்**

4 திரிபே. (123)

## 1468. அறிமடத்தின் பெயர்

பெருஞ்சேந்தன் அம்பர்ப் பெருமானைப் போல,
தெரிந்துபிறர் அறிவின் சோர்வு புறம்மறைத்து,
அறிந்தும் அறியார் போறல் அறிமடம்.

**அறிமடத்தின் பெயர் :**

அறிந்தும் அறியார் போறல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1 : 3—4 எம்பற் பெருமானைப போல

2 : 4 புறமறைத்தற்கு

3 : 1—2 அறிந்து மறியாமை. (124)



## 1469. மறவாக்கடனின் பெயர்

கடைப்பிடி சொண்டது மறவாக்கடனே.

**மறவாக்கடனின் பெயர் :** (1)

கடைப்பிடி. (125)

## 1470. நோயின் பெயர்

மடங்கல், நீழல், மடி, அஞர், அழுங்கல்,
முடங்கு, குத்து, பிணி, பையுள், சூர், நோய்.

**நோயின் பெயர் :** (10)

1. மடங்கல், 2. நீழல், 3. மடி, 4. அஞர், 5. அழுங்கல், 6. முடங்கு, 7. குத்து, 8. பிணி, 9. பையுள், 10. சூர்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1 : 1—2 மடங்கு நீழ்பெயர்

2 : 1—2 மடங்கு த்த்து.

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் சேர்த்த புது நூற்பாக்கள் இரண்டு வருமாறு :

**நரக நோயின் பெயர்**

197. ★ நரகநோ யாதனை.

**வேதனை பண்ணும் நோயின் பெயர்**

198. ★ வாதை வீதி வேதனை பண்ணுநோய். (126)

## 1471. உன்மத்தத்தின் பெயர்

மான்றல், மாழ்கல், கழுமல், களி, மறல்,
மால், மாழாத்தல், மையல், மைந்து, உணராமை,
மருள், மாறு, மயக்கம், அனந்தர், இளமை,
இருள், மயர்வு, ஏமம், பித்து, உள்மத்தம் ஆகும்.

**உன்மத்தத்தின் பெயர் :** (19)

1. மான்றல், 2. மாழ்கல், 3. கழுமல், 4. களி,

5. மறல், 6. மால், 7. மாழாத்தல், 8. மையல், 9. மைந்து, 10. உணராமை, 11. மருள், 12. மாறு, 13. மயக்கம், 14. அனந்தர், 15. இளைமை, 16. இருள், 17. மயர்வு, 18. ஏமம், 19. பித்து.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : மயக்கத்தின் பெயர்,
3 மருள்மான்றனந்தர் மயங்க மிளமை
மருள் மயல் மயக்க
4 : 1—2 இருள்மப ரேமம் (127)

## 1472. தெளிவின் பெயர்

நனவு, உணர்வு, தேற்றம், துணிவு, தெளிவு ஆகும்.

**தெளிவின் பெயர் : (4)**

1. நனவு, 2. உணர்வு, 3. தேற்றம், 4. துணிவு, (128)

## 1473. பொறாமையின் பெயர்

நோனாமை, பொறாமை ஆம் என நுகல்வர்.

**பொறாமையின் பெயர் : (1)**

நோனாமை. (129)

## 1474. நீங்காமையின் பெயர்

ஆனாமை, தண்டாமை, ஆயிரண்டும் நீங்காமை.

**நீங்காமையின் பெயர் : (2)**

1. ஆனாமை, 2. தண்டாமை. (130)

## 1745. பொறையின் பெயர்

நோன்மை, நோன்றல், பொறை என நுவல்வர்.

**பொறையின் பெயர் : (2)**

1. நோன்மை, 2. நோன்றல்.



**பாடவேறுபாடு—விளக்கம்**

இந்நூற்பா 1473 ஆம் நூற்பாவாகிய பொறாமையின் பெயரை அடுத்தும் சில பிரதிகளில் வைக்கப்பட்டுள்ளது. இதன் பின்னர் முதற்பதிப்பாசிரியர் சேர்த்த புதுநூற்பா ஒன்று உள்ளது.

**மற்றும் பொறையின் பெயர்**

199. ★ கமித்தலு மாற்றலுஞ் சகித்தலு மோரிப்பு
மற்றப் பொறையை வகுக்குங் கிளவி. (131)

## 1476. வறுமையின் பெயர்

அல்கல், ஏற்கம், இலம்பாடு, இன்மை,
நல்குரவு, வறுமை ஆம் என நவில்வர்.

**வறுமையின் பெயர் : (5)**

1. அல்கல், 2. ஒற்கம், 3. இலம்பாடு, 4. இன்மை, 5. நல்குரவு.

**பாடவேறுபாடு—விளக்கம்**

இதன்பின் முதற்பதிப்பாசிரியர் சேர்த்த புது நூற்பா ஒன்று வருமாறு :

**மற்றும் வறுமையின் பெயர்**

200. ★ குறைவு மிச்சை குறுவாழ்க்கை யஃகல்
சிறுமையிடி வறுமை நிரப்புஞ் செப்புப. (132)

## 1477. தனிமையின் பெயர்

புலம்பே, [தனிமை.

**தனிமையின் பெயர் : (1)**

புலம்பு.

**பாடவேறுபாடு—விளக்கம்**

புலம்பே தனிமை யாமெனச் செப்புவர்,
என்றும் சில பிரதிகளில் காணப்படுகிறது.
இதன்பின் முதற்பதிப்பாசிரியர் சேர்த்த புதுநூற்பா :

**மற்றுந் தனிமையின் பெயர்**

**201. ★ கேவலத்தோ டேகங் கிளத்துப தனிமை.**

இந்நூற்பாவின் பின்,

நிறைவின் பெயர் என்னும் தலைப்பில்,

'துவன்று நிறைவாகும்'

என ஒரு நூற்பா ஒரு சில பிரதிகளில் காணப்படுகிறது. (133)

## 1478. பொலிவின் பெயர்

துப்பு, கலித்தல், பம்பல், துவன்றல்,
பொற்பு, கஞறல், உவப்பே, அமறல்,
அதிகம், மங்கலம், மலர்ச்சி என்று இவை
**பொலிவின் பெயர்** எனப் புகன்றனர் புலவர்.

**பொலிவின் பெயர் : (11)**

1. துப்பு, 2. கலித்தல், 3. பம்பல், 4. துவன்றல், 5. பொற்பு, 6. கஞறல், 7. உவப்பு, 8. அமறல், 9. அதிகம், 10. மங்கலம், 11. மலர்ச்சி.

**பாடவேறுபாடு—விளக்கம்**

2 : 4 அமரல், ஏமறல்
3 : 3—4 மலர்ச்சி யென்றின்னவை
4 : 3—4 புகறல் வேண்டும். (134)

## 1479. பொலிவழிதலின் பெயர்

புல்லெனல் மழுங்கல் பொலிவழிதல் ஆகும்.

**பொலிவழிதலின் பெயர் : (2)**

1. புல்லெனல், 2. மழுங்கல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1—2 புல்லெ னழுங்கல் (135)

## 1480. வருத்தத்தின் பெயர்

உயாவே, அனுக்கம், கவறல், உயங்கல்,



அயாவே, ஆகுலம், அணங்கு கசிவே,
வயாவே என்றிவை வருத்தம் ஆகும்.

**வருத்தத்தின் பெயர் : (9)**

1. உயா, 2. அனுக்கம், 3. கவறல், 4. உயங்கல், 5. அயா, 6. ஆகுலம், 7. அணங்கு, 8. கசிவு, 9. வயா.

**பாடவேறுபாடு—விளக்கம்**

2 : 1 அயர்வே
3 : 1—2 வயாவென் றின்னவை. (136)

## 1481. சோம்பின் பெயர்

அஞ்சல், அழுங்கல், அலைசுதல், மாழ்கல்,
தூங்கல், அசைதல், மடி, சோம்பு ஆகும்.

**சோம்பின் பெயர் : (7)**

1. அஞ்சல், 2. அழுங்கல், 3. அலைசுதல், 4. மாழ்கல், 5. தூங்கல், 6. அசைதல், 7. மடி.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : சோம்பலின் பெயர்.

இந்நூற்பாவின் முதலடியை அழுதலின் பெயர் என்றும், இரண்டாம் அடியைச் சோம்பின் பெயர் என்றும் தனித் தனி இரு நூற்பாவாக ஒரு பிரதி தந்துள்ளது.

1 துஞ்ச லழுங்க லலசுதல் ஞொள்கல்

1 ஆஞ்சி யழுங்க லலைசன் மாழ்க
லஞர்தன் ஞொள்க லஞ்ச லாழ்த
றூங்க லசைதன் மடிசோம்பலாகும்—அச்சுப்பிரதி.

**அழுதலின் பெயர்** என்னும் தலைப்பில்,
அஞர்த லழுங்க லலசுதல் ஞொள்கல்
சஞ்சல மாழ்க லழுதலாகும்

என்றும் சில பிரதி.

இதன் பின்னர் முதற்பதிப்பாசிரியர் சேர்த்த புது நூற்பா ஒன்று உளது.

**மற்றுஞ் சோம்பலின் பெயர்**

202. ★ மூரி மந்தமு மொழிப சோம்பல். (137)

## 1482. ஒண்மை என்னும் பெயர்

நன்மையும், மிகுதியும், அறிவும், ஒழுங்கும்,
ஒண்மை என்னும் சொல்லிற்கு உரிய.

**ஒண்மையின் பெயர் : (4)**

1. நன்மை, 2. மிகுதி, 3. அறிவு, 4. ஒழுங்கு.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : ஒண்மையின் பெயர், ஒண்மை என்னும் சொற்பொருட்பெயர். (138)

## 1483. நயன் என்னும் பெயர்

பயனும், மகிழ்வும், இன்பமும், நன்றும்,
நயன்என கிளவி நடைபெற்று இயலும்.

**நயன் என்னும் பெயர் : (4)**

1. பயன், 2. மகிழ்வு, 3. இன்பம், 4. நன்கு.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : நயத்தின் பெயர், நயன் என்னும் சொற்பொருட்பெயர். (139)

## 1484. அச்சத்தின் பெயர்

அதிர்ப்பு, கம்பலை, வெருவு, அஞர், அழுங்கல்,
பொதிர்ப்பு, துணுக்கம், இரிதல், கசுதல்,
வெடிப்பு, துளக்கம், கரிப்பு, தெருமரல்,
விதிர்ப்பு, பனித்தல், அலமரல், வெம்மை,



வெறியே, புலம்பு, பனி, கவலை, சூர், பிறக்கம்,
நடுக்கம், இடும்பை, மிறையே, உலைதல் என்று
அடுத்த எல்லாம் அச்சம் ஆகும்.

**அச்சத்தின் பெயர் : (27)**

1. அதிர்ப்பு, 2. கம்பலை, 3. வெருவு, 4. அஞர், 5. அழுங்கல், 6. பொதிர்ப்பு, 7. துணுக்கம், 8. இரிதல், 9. கசுதல், 10. வெடிப்பு, 11. துளக்கம், 12. கரிப்பு, 13. தெருமரல், 14. விதிர்ப்பு, 15. பனித்தல், 16. அலமரல், 17. வெம்மை, 18. வெறி, 19. புலம்பு, 20. பனி, 21. கவலை, 22. சூர், 23. பிறக்கம், 24. நடுக்கம், 25. இடும்பை, 26. மிறை, 27. உலைதல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

2 : 3—4 பீதி கசுதல்

3 : 3 சதிர்ப்பே

5—7 வெறியே புலம்பு வெடியே யலமரல்
பனியே கவலைசூர் பறப்பு நடுக்கம்
இடும்பை பிறக்க பிறையே யுலைதலென்
றடுத்த வெல்லா மச்ச மாகும்.

5 : 2 புலம்புபீதி

6 : 2 இடும்பல்

இதன் பின்னர் முதற்பதிப்பாசிரியர் சேர்த்த இரு புது நூற்பாக்கள் வருமாறு :

**மற்றுமச்சத்தின் பெயர்**

203. ★ பேநா முருமென வரூஉங் கிளவி
யாமுறை மூன்று மச்சப் பொருள.

**அச்சக் குறிப்பின் பெயர்**

204. ★ திட்க லோட றெங்கன் ஞெரேலென
றுட்க வுலமர றுடுக்கென்ல் வெய்துற
லஞுக்கன் ஞொள்க லச்சக் குறிப்பாம்
குலைதலொடு துண்ணெனல் கூறுப வதற்கே.
(140)

## 1485. கூம்புதலின் பெயர்

சாம்புதல், ஒடுக்கம், கூம்புதல் ஆகும்.

**கூம்புதலின் பெயர் : (2)**

1. சாம்புதல், 2. ஒடுக்கம். (141)

## 1486. மெலிவின் பெயர்

தேம்புதல், ஞொள்கல், சிக்கம், முசிப்புஎன்று
ஆம்புகல், நான்கும் மெலிவு என இசைப்பர்.

**மெலிவின் பெயர் : (4)**

1. தேம்புதல், 2. ஞொள்கல், 3. சிக்கம், 4. முசிப்பு.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1 : 4 மொசிவென்

2 : 3—4 மெலிவென் றறைவர். (142)

## 1487. துன்பத்தின் பெயர்

இன்னல், அழுங்கல், வருத்தம், பிணி, இடுக்கண்,
அல்லல், நோ, இன்னாங்கு, அரந்தை, இடும்பை,
படர், துனி, துக்கம், அஞர், புலம்பு, எவ்வம்,
நடலை, கம்பலை, செல்லல், பாசறை,
பையுள், சூர், துயர், பைதல், இரக்கம்,
சிறுமை, விழுமம், கவலை, பீழை,
வறுமை, பருவரல், புன்கண், நோவு, அலமரல்,
உறுவல், கவ்வை, பனி, வெய்துறல், மம்மர்,
உறுகண், அலத்தல், துன்பம் என்று உரைப்பர்.

**துன்பத்தின் பெயர் : (41)**

1. இன்னல், 2. அழுங்கல், 3. வருத்தம், 4. பிணி, 5. இடுக்கண், 6. அல்லல், 7. நோ, 8. இன்னாங்கு, 9. அரந்தை, 10. இடும்பை, 11. படர், 12. துனி,



13. துக்கம், 14. அஞர், 15. புலம்பு, 16. எவ்வம், 17. நடலை, 18. கம்பலை, 19. செல்லல், 20. பாசறை, 21. பையுள், 22. சூர், 23. துயர், 24. பைதல், 25. இரக்கம், 26. சிறுமை, 27. விழுமம், 28. கவலை, 29. பீழை, 30. வறுமை, 31. பருவரல், 32. புன்கண், 33. நோவு, 34. அலமரல், 35. உறுவல், 36. கவ்வை, 37. பனி, 38. வெய்துறல், 39. மம்மர், 40 உறுகண், 41. அலத்தல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1 : 4 இடுக்கம்

2 : 1—3 அல்லனா யின்னா வரந்தை

4 : 4 பாகறை

7 : 3—4 புன்கணோ வாகுலம்

9 : 1—2 உறுகண லாத்தல், உறுக ணலர்த்தல், உறுக ணலைதல்.

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் சேர்த்த புது நூற்பா ஒன்று வருமாறு :

**மற்றும் துன்பத்தின் பெயர்**

205. ★ இடர்கோட் டாலை யேதங் கேத
மலக்கண் பீடையோ டல்ல கண்டமுந்
துன்பப் பொருளைச் சொல்லுங் கிளவி. (143)

## 1488. மெலிவின் பால

பழங்கணும் புன்கணும் மெலிவின் பால.

**மெலிவின் பால : (2)**

1. பழங்கண், 2. புன்கண்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

இந்நூற்பாவை 1486 ஆம் நூற்பாவாகிய மெலிவின் பெயரை அடுத்து 'மற்றும் மெலிவின் பெயர்' என்னும் தலைப்பில் அச்சுப்பிரதி அமைத்துள்ளது. (144)

## 1489. குற்றத்தின் பெயர்

காசு, நவை, தவறு, கசடு, வசை, வடு,
மாசு, மானம், அரில், செயிர், புகர், பழுது,
ஏதம், ஆசு, போக்கு, புரை, பழி,
கோது, தோம், தொழுவு, இழிவு, குற்றம் ஆகும்.

**குற்றத்தின் பெயர் : (21)**

1. காசு, 2. நவை, 3. தவறு, 4. கசடு, 5. வசை, 6. வடு, 7. மாசு, 8. மானம், 9. அரில், 10. செயிர், 11. புகர், 12. பழுது, 13. ஏதம், 14. ஆசு, 15. போக்கு, 16. புரை, 17. பழி, 18. கோது, 19. தோம், 20. தொழுவு, 21. இழிவு.

**பாடவேறுபாடு—விளக்கம்**

3 : 3 பொக்குப். பொக்கு எனினும் அமையும் என்பது முதற்பதிப்பாசிரியரின் அடிக்குறிப்பு.

4 : 2—3 தொழுவிவை குற்றம், இழிவு குற்றம்.

5 ஆம் அடியாக, 'மிறையரிப் பேசிவை மூன்றும் வரையார்' என்று அச்சுப்பிரதியில் காணப்படுகிறது.

இதன்பின் முதற்பதிப்பாசிரியர் சேர்த்த புதுநூற்பா.

**மற்றுங் குற்றத்தின் பெயர்**

206. ★ அழிப்புக் குறைகழிப்புக் கொழிப்பு மதற்காம்.

இதனை அடுத்து, 'அருவருப்பின் பெயர்' என்னும் தலைப்பில், 'பயிர்ப்புக் குற்சித மருவருப் பாகும்' என ஒரு நூற்பா அச்சுப்பிரதியில் உள்ளது. இது ஏட்டுப் பிரதிகளில் காணப்படவில்லை. (145)

## 1490. பகையின் பெயர்

முனை, உறழ், துப்பு, முரண், படி, தெவ்வொடு,
இகல், பகை ஆகும் என்றிசினோரே.

**பகையின் பெயர் : (7)**

1. முனை, 2. உறழ்வு, 3. துப்பு, 4. முரண், 5. படி, 6. தெவ், 7. இகல்.



**பாடவேறுபாடு—விளக்கம்**

1 : 2—4 துவ்வு முரண்படை தெவ்வோ. (146)

## 1491. வஞ்சனையின் பெயர்

கூடம், புள்ளுவம், குத்திரம், கைதவம்,
மாயம், பட்டிமை, வஞ்சனை ஆகும்.

**வஞ்சனையின் பெயர் : (6)**

1. கூடம், 2. புள்ளுவம், 3. குத்திரம், 4. கைதவம், 5. மாயம், 6. பட்டிமை.

**பாடவேறுபாடு— விளக்கம்**

கூடம் புள்ளுவங் குடிலங் குத்திரங்
கைதவ மாயம் பட்டிமை வஞ்சனை—என்பது அச்சுப் பிரதிப் பாடம்.

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் சேர்த்த புது நூற்பா :

**மற்றும் வஞ்சனையின் பெயர்**

207. ★ படிறு குய்யம் பகர்வ வஞ்சனை
சாட்டியப் பெயரும் சாற்றப் படுமே. (147)

## 1492. நட்பின் பெயர்

கேண்மையும், தொடர்பும், கேளும் நட்பே.

**நட்பின் பெயர் : (3)**

1. கேண்மை, 2. தொடர்பு, 3. கேள்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

3 அடுக்கும். (148)

## 1493. ஒழுக்கத்தின் பெயர்

கையே ஒழுக்கம்.

**ஒழுக்கத்தின் பெயர் :** *(1)*

கை. *(149)*

## 1494. ஒழுகலாற்றின் பெயர்

கையாறு ஒழுகலாறு.

**ஒழுகலாற்றின் பெயர் :** *(1)*

கையாறு.

**பாடவேறுபாடு—விளக்கம்**

*1493—1494* ஆம் நூற்பாக்கள், 'ஒழுக்கத்தின் பெயர் ஒழுகலாற்றின் பெயர்' என்னும் தலைப்பில் ஒரே நூற்பா வாகவும் சில ஏடுகளில் உள. *(150)*

## 1495. செயலின்மையின் பெயர்

கையறல், செயலின்மை.

**செயலின்மையின் பெயர் :** *(1)*

கையறல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1 கையறை. *(151)*

## 1496. அடைக்கலத்தின் பெயர்

கையடை, அடைக்கலமே.

**அடைக்கலத்தின் பெயர் :** *(1)*

கையடை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

2 அடைக்கலம்

*1495, 1496* ஆம் நூற்பாக்கள், 'செயலின்மையின் பெயர், அடைக்கலத்தின் பெயர்' என்னும் தலைப்பில் ஒரே நூற்பாவாகவும் சில ஏடுகளில் உள. *(152)*

## 1497. கையொழியாமையின் பெயர்

கைதூவாமை, கையொழியாமை.



**கையொழியாமையின் பெயர் :** *(1)*

கைதூவாமை. *(153)*

## 1498. இன்பத்தின் பெயர்

ஏமமும் நயனும் இன்பம் ஆகும்.

**இன்பத்தின் பெயர் :** *(2)*

1. ஏமம், 2. நயன்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : இன்பமென்பதின் பெயர்.

இந்நூற்பா அச்சுப் பிரதியில் இல்லை. *(154)*

## 1499. மேற்கோளின் பெயர்

பூட்கைக் கிளவி, மேற்கோள் ஆகும்.

**மேற்கோளின் பெயர் :** *(1)*

பூட்கை. *(155)*

## 1500. பழமையின் பெயர்

தொன்மை, தொடர்பு, தொத்து, தொன்று,
தொண்டு, பூர்வம், தொல்லை, மூரி,
முந்தை, புராதனம், புராணம், முதுமைஎன
வந்தவை பழமை ஆம்என வைப்பர்.

**பழமையின் பெயர் :** *(12)*

1. தொன்மை, 2. தொடர்பு, 3. தொத்து, 4. தொன்று, 5. தொண்டு, 6. பூர்வம், 7. தொல்லை, 8. மூரி, 9. முந்தை, 10. புராதனம், 11. புராணம், 12. முதுமை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

*4 : 1—2* வந்தமை பழமை, 4. வகுப்பர்

'தொன்மை தொடர்பு தொத்துத் தொண்டு
முறையே முன்பு தொன்று பூர்விந்
தொல்லை மூரி விருத்தம் முது
முந்து புராதனம் புராண முதுமையென
வந்தவை பழமைப் பாமென வைப்பர்'

என்பது அச்சுப்பிரதிப் பாடம். (156)

## 1501. புதுமையின் பெயர்

புத்தேள், யாணர், புனை, புணர், விருந்து,
(வைத்த) வம்பு, கடி, நவம், புதுமை.

**புதுமையின் பெயர் : (8)**

1. புத்தேள், 2. யாணர், 3. புனை, 4. புணர், 5. விருந்து, 6. வம்பு, 7. கடி, 8. நவம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

2 : 1 நூதனம்—அச்சுப்பிரதி. (157)

## 1502. ஈன்றணுமையின் பெயர்

புனிறு, ஈன்றணுமை.

**ஈன்றணுமையின் பெயர் : (1)**

புனிறு. (158)

## 1503. நிலையின்மையின் பெயர்

நிலையின்மை, வம்பே.

**நிலையின்மையின் பெயர் : (1)**

வம்பு.

**பாடவேறுபாடு—விளக்கம்**

ஈன்றணுமையின் பெயர் நிலையின்மையின் பெயர் என்னும் தலைப்பில் 1502, 1503 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். (159)

## 1504. பிறப்பின் பெயர்

சூதகம், பிறந்தை, பயம், சனிப்பு, சனனம்,
(ஓதிய) தோற்றம், யோனி, பவம், பிறப்பே.



**பிறப்பின் பெயர் : (8)**

1. சூதகம், 2. பிறந்தை, 3. பயம், 4. சனிப்பு, 5. சனனம், 6. தோற்றம், 7. யோனி, 8. பவம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் பாடிச் சேர்த்த புது நூற்பா :

**மற்றும் பிறப்பின் பெயர்**

208. ★ சன்மமு முற்பத்தியுஞ் சாற்றுப வதற்கே. (160)

## 1505. கழிபிறப்பின் பெயர்

உம்மை, கழிபிறப்பே.

**கழிபிறப்பின் பெயர் : (1)**

உம்மை. (161)

## 1506. இப்பிறப்பின் பெயர்

இம்மை, இப் பிறப்பே.

**இப்பிறப்பின் பெயர் : (1)**

இம்மை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

கழிபிறப்பின் பெயர், இப்பிறப்பின் பெயர் என்னும் தலைப்பில் 1505, 1506 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். (162)

## 1507. வருபிறப்பின் பெயர்

அம்மையும், மறுமையும் வருபிறப்பு ஆகும்.

**வருபிறப்பின் பெயர் : (2)**

1. அம்மை, 2. மறுமை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் சேர்த்த மூன்று புது நூற்பாக்கள் வருமாறு :

**ஒருபிறப்பின் பெயர்**

209. ★ ஒருபிறப் பொருமை.

**எப்பிறப்பின் பெயர்**

210. ★ எப்பிறப் பெம்மை.

**ஏழுபிறப்பின் பெயர்**

211. ★ ஏழ்பிறப் பேழ்பவம்.

எழுமை யேழ்பவ மெழுபிறப் பாகும்—என்பது பிற்பதிப்புப் பாடம். (163)

## 1508. பின்னின் பெயர்

வழி, பின் ஆகும்.

**பின்னின் பெயர் : (1)**

வழி. (164)

## 1509. முறைமையின் பெயர்

மரபு, பாரம்பரியம், முறைமை.

**முறைமையின் பெயர் : (2)**

1. மரபு, 2. பாரம்பரியம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

பின்னின் பெயர், முறைமையின் பெயர் எனத் தலைப்பிட்டுப் பின்வருமாறும் இந்நூற்பா மாறிக் காணப்படுகிறது.

•வழிபின் னாகு மரபுபா ரம்பரிய
மொழியின் முறைமை யாமென மொழிவர். (165)

## 1510. இளமையின் பெயர்

மழவு, நவ்வி, சேய், போதகம், மஞ்சு,
குழவு, குருளை, கயம், இளை, புருவை,
முருகே, தருணம், பீனே, பருவம்,



சேடு, கொம்மை, எனஈ ரெட்டும்
நாடில் இளமைப் பெயர்என நவில்வர்.

**இளமைப் பெயர் : (16)**

1. மழவு, 2. நவ்வி, 3. சேய், 4. போதகம், 5. மஞ்சு, 6. குழவு, 7. குருளை, 8. கயம், 9. இளை, 10. புருவை, 11. முருகு, 12. தருணம், 13. பீள், 14. பருவம், 15. சேடு, 16. கொம்மை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

2 : 1 குழவி, 3. கயமுளை

3 : 3 பீழே

5 : 2 இளைமைப்

இதன்பின் முதற்பதிப்பாசிரியர் சேர்த்த புதுநூற்பா :

**மற்றுமிளைமையின் பெயர்**

212. ★ வெண்மையு நாகும் விளம்புவ விளைமை. (166

## 1511. இளமைச் செவ்வியின் பெயர்

கோமளம், இளமைச் செவ்வியைக் கூறும்.

**இளமைச் செவ்வியின் பெயர் : (1)**

கோமளம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1 : 2 கொம்மை யிள்மைச். (167)

## 1512. காரணந்தெரி சொல்லின் பெயர்

நிபமும், பொருட்டும், ஏதுவும், நிமித்தமும்,
திறனும், வாயிலும், காரணம் தெரிசொல்.

**காரணந்தெரி சொல்லின் பெயர் : (6)**

1. நிபம், 2. பொருட்டு, 3. ஏது, 4. நிமித்தம், 5. திறன், 6. வாயில்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : ஏதுவின் பெயர். (168)

## 1513. பற்றுக்கோட்டின் பெயர்

கந்தும், ஆலம்பனமும் **பற்றுக்கோடு** ஆகும்.

**பற்றுக்கோட்டின் பெயர் : (2)**

1. கந்து, 2. ஆலம்பனம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

3—4 பற்றுக் கோடே.

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் தந்த புதுநூற்பா ஒன்று வருமாறு :

**மற்றும் பற்றுக்கோட்டின் பெயர்**

213. ★ தஞ்சந்தா ஊற்றமுஞ் சாற்றுப வதற்கே. (169)

## 1514. உரிமையின் பெயர்

பாங்குபால், கிழமை தாயம் பூட்சி என்று
சங்குஇவை ஐந்தும் **உரிமை** ஆகும்.

**உரிமையின் பெயர் : (5)**

1. பாங்கு, 2. பால், 3. கிழமை, 4. தாயம், 5. பூட்சி.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1 : 3—4 தாய மாட்சி, தாயமூட்சி.

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் தந்த புதுநூற்பா ஒன்று வருமாறு :

**மற்றுமுரிமையின் பெயர்**

214. ★ காணிகெழு தகைமையுங் கெழுறுப வுரிமை. (170)

## 1515. இலாபத்தின் பெயர்

ஊதியம், பசை, பயன், பலித்தல், ஆக்கம்என்று
ஓதிய ஐந்தும் **இலாபம்** ஆகும்.



**இலாபத்தின் பெயர் : (5)**

1. ஊதியம், 2. பசை, 3. பயன், 4. பலித்தல், 5. ஆக்கம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1 : 3—4 பனிச்சை யாக்கமென், பனித்த லாக்கமென்

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் தந்த புதுநூற்பா ஒன்று வருமாறு :

**மற்றுமிலாபத்தின் பெயர்**

215. ★ பேறு மதிகமும் பேசுப விலாபம். (171)

## 1516. பூப்பென்னும் பெயர்

பூப்பு, மகளிர் கையுறாப் பொருட்டே.

**பூப்பென்னும் பெயர் : (1)**

மகளிர் கையுறாப் பொருட்டு.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : பூப்பென்னுஞ் சொற்பொருட்பெயர், மகளிர் கையுறாப் பொருட்டின் பெயர். (172)

## 1517. அசுத்தத்தின் பெயர்

தூய்தன்மை, வாலாமை, **அசுத்தம்** ஆகும்.

**அசுத்தத்தின் பெயர் : (2)**

1. தூய்தன்மை, 2. வாலாமை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : சூதகத்தின் பெயர்.

3—4 சூதக மாகும், சூதக மசுத்தம். (173)

## 1518. அழுக்கின்மையின் பெயர்

அமலமும் விமலமும் **அழுக்கின்மை** ஆகும்.

அழுக்கின்மையின் பெயர் : (2)

1. அமலம், 2. விமலம். (174)

## 1519. தூய்மையின் பெயர்

புனிதம், பவித்திரம், தூய்மை ஆகும்.

தூய்மையின் பெயர் : (2)

1. புனிதம், 2. பவித்திரம்.

பாடவேறுபாடு—விளக்கம்

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் சேர்த்த புது நூற்பா :

மற்றுந்தூய்மையின் பெயர்

216. ★ துப்புத் தூப்பாவனம் வாலுந் தூய்மை. (175

## 1520. தருமத்தின் பெயர்

சீலம், அருள், மங்கலம், சுபமே, சுகிர்தம்என
நாலும் ஒன்றும் தருமம் ஆகும்.

தருமத்தின் பெயர் : (5)

1. சீலம், 2. அருள், 3. மங்கலம், 4. சுபம், 5. சுகிர்தம். (176)

## 1521. அறிவின் பெயர்

சேதனம், அறிவே.

அறிவின் பெயர் : (1)

சேதனம். (177)

## 1522. அறிவின்மையின் பெயர்

அசேதனம் அறிவின்மை.

அறிவின்மையின் பெயர் : (1)

அசேதனம்.



பாடவேறுபாடு—விளக்கம்

அறிவுக்கும் அறிவின்மைக்கும் பெயர் என்னுந் தலைப்பில் 1521, 1522 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் கொள்வர். சேதனத்துக்கும், அசேதனத்துக்கும் பெயர் எனத் தலைப்பு வேறுபாடும் உண்டு. (178)

## 1523. தலைமையின் பெயர்

ஆணை, தலைமை, தலை, மேல் ஆகும்.

தலைமையின் பெயர் : (3)

1. ஆணை, 2. தலை, 3. மேல்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : மேலின் பெயர்,

1 ஆணே. (179)

## 1524. அழிவில் பொருளின் பெயர்

குமரி, கன்னி, குவணை, கோணை,
அழிவில் பொருளே ஆகும் என்ப.

அழிவில் பொருளின் பெயர் : (4)

1. குமரி, 2. கன்னி, 3. குவணை, 4. கோணை.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : அழிவின்மையின் பெயர்.

'குமரி கன்னி கோணை யழிவின்மை' என்றும்

'குமரி கன்னி கோணை யழிவில் பொருள்' என்றும் பாட வேறுபாடும் உண்டு. (180)

## 1525. கரணத்தின் பெயர்

கரணம், கணிதம்.

கரணத்தின் பெயர் : (1)

கணிதம். (181)

## 1526. எண்ணின் பெயர்

அலகு, எண் ஆகும்.

**எண்ணின் பெயர் : (1)**

அலகு.

**பாடவேறுபாடு—விளக்கம்**

எண்ணின் பெயர் என்னும் தலைப்பில் 1525, 1526 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர்.

கரணங் கணிதங் கணக்கல கெண்ணாம்—என்பது அச்சுப் பிரதி. (182)

## 1527. பரியாயத்தின் பெயர்

பரியாயம், பலமுறை.

**பரியாயத்தின் பெயர் : (1)**

பலமுறை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

2 பன்முறை (183)

## 1528. பல்விதத்தின் பெயர்

பல்விதம், நானாவிதம்.

**பல்விதத்தின் பெயர் : (1)**

நானாவிதம்.

**பாடவேறுபாடு—விளக்கம்.**

தலைப்பு : பல்முறைப் பெயர், நானாவிதத்தின் பெயர்.

1 பலவிதம்.

நானாவிதத்தின் பெயர் என்னும் தலைப்பில் 1527, 1528 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சில ஏடுகள் கொண்டுள்ளன. (184)

## 1529. முதலின் பெயர்

ஆதியும் மோனையும் தொடக்கமும் முதல் ஆம்.



**முதலின் பெயர் : (3)**

1. ஆதி, 2. மோனை, 3. தொடக்கம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

இதன்பின் நடுவின் பெயர் என்னும் தலைப்பில் காணப் படும் பின்வரும் நூற்பா பெரும்பான்மைப் பிரதிகளில் இல்லை.

இடையே சமன்பக ணாப்பண் மத்திம
நள்ளே நடுவென் றோதினர் நயந்தோர். (185)

## 1530. ஈற்றின் பெயர்

அந்தம், தீர்தல், முடிவே, ஈறுஎன
வந்த நான்கும் ஒன்றன் பால.

**ஈற்றின் பெயர் : (4)**

1. அந்தம், 2. தீர்தல், 3. முடிவு, 4. ஈறு.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1 : 4 யிறுதியென

அந்தந் தீர்தல் கடைமுடி வீறென
வந்த வைந்து மீற்றின் பால

என்றும் சில பிரதிகளில் பாடம். (186)

## 1531. அனுபவத்தின் பெயர்

துவ்வே, துப்புரவு, அனுபவம் ஆகும்.

**அனுபவத்தின் பெயர் : (2)**

1. துவ்வு, 2. துப்புரவு.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1. தூவே. (187)

## 1532. வளமையின் பெயர்

கெழுமை, யாணர், மல்லல், வண்மை,
கொழுமை, வாய்ப்பு, வளமை ஆகும்.

**வளமையின் பெயர் : (6)**

1. கெழுமை, 2. யாணர், 3. மல்லல், 4. வஞ்சமை, 5. கொழுமை, 6. வாய்ப்பு.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1 : 1 கொழுமை. செழுமை

2 : 1 கெழுமை, செழுமை. (188)

## 1533. கெழுமையின் பெயர்

**கெழுமை, கெழுமுதல்,**

**கெழுமையின் பெயர் : (1)**

கெழுமுதல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : செழுமையின் பெயர்.

செழுமை செழித்தல்—அச்சுப்பிரதி. (189)

## 1534. கொழுமையின் பெயர்

**கொழுமை,** கொழுப்பே.

**கொழுமையின் பெயர் : (1)**

கொழுப்பு.

**பாடவேறுபாடு—விளக்கம்**

செழித்தலுக்கும் கொழுமைக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1533, 1534 ஆம் நூற்பாக்கள் ஒன்றாயிணைய,

செழுமை செழித்தல் கொழுமை கொழுப்பே

என ஒரே நூற்பாவாகவும் சில பிரதிகளில் பாடம். (190)

## 1535. வேறுபடுதலின் பெயர்

**விகிர்தமும் விகடமும் வேறுபடல் பொருள்.**

**வேறுபடுதலின் பெயர் : (2)**

1. விகிர்தம், 2. விகடம்.



**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : வேறுபாட்டின் பெயர்.

3—4 வேறுபடற் பொருட்டே. (191)

## 1536. குணமின்மையின் பெயர்

சீரணம், சிதம்பு, சீத்தை, **குணமின்மை.**

**குணமின்மையின் பெயர் : (3)**

1. சீரணம், 2. சிதம்பு, 3. சீத்தை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1 சீருணம்

இதன் பின்னர் முதற்பதிப்பாசிரியர் சேர்த்த மூன்று புது நூற்பாக்கள் வருமாறு :

**தாமதத்தின் பெயர்**

217. ★ விளம்பனந் தாமதம் விளம்புங் கிளவி.

**கேட்டின் பெயர்**

218. ★ இழிவு நந்த விறுத றிரிதல்
வழுவழுங்கன் முறிதன் மடிகயங் கேடே
சுதமுங் கந்தலுஞ் சொல்லுப வதற்கே.

**பாவமென்னும் பெயர்**

219. ★ பாவமு மறமும் பாவையுஞ் செடியு
முகமு மொருபொருட் கிளவி யாகும். (192)

## 1537. உறவின் பெயர்

**உறவி உறவே.**

**றவின் பெயர் : (1)**

உறவி. (193)

## 1538. துறவின் பெயர்

**துறவி துறவே.**

**துறவின் பெயர் :** *(1)*

துறவி.

**பாடவேறுபாடு—விளக்கம்**

உறவுக்குந் துறவுக்கும் பெயர் என்னும் 1537, 1538 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். **(194)**

## 1539. செல்வத்தின் பெயர்

வெறுக்கை, மா, பொறி, சீர், விபவம், செல்வம்.

**செல்வத்தின் பெயர் :** (5)

1. வெறுக்கை, 2. மா, 3. பொறி, 4. சீர், 5. விபவம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் இணைத்த புது நூற்பா ஒன்று வருமாறு :

**மற்றுஞ் செல்வத்தின் பெயர்**

220.★ விருத்தி யாக்கந் திருமாடிடம் வாழ்க்கை
பெருக்கமுஞ் செல்வப் பெயரெனப் பேசுப.

**(195)**

## 1540. மணத்தின் பெயர்

மணம், வசந்தம், முருகு, மன்றல், வாசம்,
விரையே, கந்தம், வதுவை, நானம்,
தேம், வெறி, ஆமோதம், கடியே, வம்பு,
கானம், பரிமளம், நறை, நாற்றம் ஆகும்.

**மணத்தின் பெயர் :** (17)

1. வசந்தம், 2. முருகு, 3. மன்றல், 4. வாசம், 5. விரை, 6. கந்தம், 7. வதுவை, 8. நானம், 9. தேம், 10. வெறி, 11. ஆமோதம், 12. கடி, 13. வம்பு, 14. கானம், 15. பரிமளம், 16. நறை, 17. நாற்றம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : நறுநாற்றத்தின் பெயர்.



மணமே வசந்த முருகு மன்றல்
வாசம் விரையே கந்தம் வதுவை
நானந் தேம்வெறி யாமோ தகமே
கடியே வம்பு கானம் பரிமளம்
நறை நறுநாற்ற மாகு மென்ப.

என்றும் இந்நூற்பாச் சற்று வடிவமாறுபாட்டுடன் சில பிரதிகளில் காணப்படுகிறது. **(196)**

## 1541. மணத்தலின் பெயர்

கமழ்தல், கந்தித்தல், நாறுதல் ஆகும்.

**மணத்தலின் பெயர் :** (3)

1. கமழ்தல், 2. கந்தித்தல், 3. நாறுதல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

இந்நூற்பாவை மணப்பொதுவின் பெயர் என்னும் தலைப்பில்,

'கமழ்தல் கந்தித்தல் நாறுதல் மணப்பொது'

எனப் பாடம் கொண்டு மணத்தின் பெயருக்கு (1540) முற்பட அச்சுப்பிரதி கொண்டுள்ளது.

இதனை அடுத்துத் 'துர்க்கந்தத்தின் பெயர்' என்னும் தலைப்பில்,

பூதிதுர்க்கந்த மாகப் புகலுவர்.

என ஒரு நூற்பா அச்சுப்பிரதியில் காணப்படுகிறது. இது பெரும்பான்மைப் பிரதிகளிலும் இல்லை. **(197)**

## 1542. சுவையின் பெயர்

சுவையே சாரம் இரதம் இனிமை.

**சுவையின் பெயர் :** (3)

1. சாரம், 2. இரதம், 3. இனிமை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : இனிமையின் பெயர்.

இதனைத் தொடர்ந்து முதற்பதிப்பாசிரியர் அமைத்த புதுநூற்பா ஒன்று வருமாறு :

**மற்றுமினிமையின் பெயர்**

*221.* ★ சேறமுது தீமொடு தேமு மினிமை. *(198)*

## 1543. தித்திப்பின் பெயர்

தீமும், மதுரமும், தேக்கும், தேமும்,
ஆய நான்கும் **தித்திப்பு** ஆகும்.

**தித்திப்பின் பெயர் :** *(4)*

*1.* தீம், *2.* மதுரம், *3.* தேக்கு, *4.* தேம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

*1.* தீமும் மதுரமுந் தேமுந் தேக்கும்
தீயுந் தீமுந் தேமுந் தேக்கும்
தீயு மதுரமுந் தெங்குந் தேமும். *(199)*

## 1544. காழ்த்தலின் பெயர்

காயமும், கரிலும், கடுகமும், **காழ்த்தல்.**

**காழ்த்தலின் பெயர் :** *(3)*

*1.* காயம், *2.* கரில், *3.* கடுகம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : உறைப்பின் பெயர், எரிப்பின் பெயர். *(200)*

## 1545. கைத்தலின் பெயர்

**கைத்தல்,** தித்தம்.

**கைத்தலின் பெயர் :** *(1)*

தித்தம். *(201)*

## 1546. புளித்தலின் பெயர்

**புளித்தல்** ஆமிலம்.

**புளித்தலின் பெயர் :** *(1)*

ஆமிலம்.



**பாடவேறுபாடு—விளக்கம்**

கைத்தலுக்கும் புளித்தலுக்கும் பெயர் என்னும் தலைப்பில் *1545, 1546* ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் கொள்வர் சிலர். *(202)*

## 1547. ஒரு பலத்தின் பெயர்

**ஒருபலம்** ஆகும் தொடியின் பெயரே.

**ஒருபலத்தின் பெயர் :** *(1)*

தொடி.

**பாடவேறுபாடு—விளக்கம்**

'ஒருபலம் வரையே தொடியென்றாகும்' என்றும்,
'ஒருபலம் வளையே தொடியென் றாகும்' என்றும்
பாடவேறுபாடு உண்டு.

'ஒருபலப் பெயர் தொடி' என்பது அச்சுப்பிரதி.

இதனை அடுத்துக் **காற்பலத்தின் பெயர்** என்னும் தலைப்பில், 'கஃசு காற்பலம்' என்றொரு நூற்பா அச்சுப்பிரதியில் காணப்படுகிறது. இதற்குக் 'கைச காற்பலமாம்' என்றும் பாடவேறுபாடு உண்டு. இந்நூற்பா பெரும்பான்மைப் பிரதிகளிலும் இல்லை.

ஒருபலத்துக்கும் காற்பலத்துக்கும் பெயர் என்னும் தலைப்பில் 'ஒருபலப் பெயர் தொடி கைசுகாற் பலமாம்,' என்றும் சில பிரதிகளில் காணப்படுகிறது. *(203)*

## 1548. நூறுபலத்தின் பெயர்

தூக்கும், காவும், துலாமும், **நூற்றுநிறை.**

**நூறுபலத்தின் பெயர் :** *(3)*

*1.* தூக்கு, *2.* துடி, *3.* துலாம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

இதன் பின் முதற்பதிப்பாசிரியர் சேர்த்த நான்கு நூற்பாக்கள் வருமாறு :

**ஒன்றின் பெயர்**

222. ★ ஒன்றே கம்மே.

**பத்தின் பெயர்**

223. ★ தசம்பத் தாகும்.

**நூற்றின் பெயர்**

224. ★ நூறு சதமே.

**ஆயிரத்தின் பெயர்**

225. ★ நூற்றுப்பத் தாயிரம். (204)

## 1549. பலகுணத்தின் பெயர்

மாலை, பெற்றி, தன்மை, மரபு,
பால், ஊழ், பான்மை, பண்பு, முறை, உழுவல்,
தகவு, தகை, இயல்வு, குணம், நுனித்தல், உரிமை,
நிலமை, நீர்மை, பரிசு, கிழமை,
விதி, அதிகாரம், என ஒருபொருள் ஆகும்.

**பலகுணத்தின் பெயர் : (22)**

1. மாலை, 2. பெற்றி, 3. தன்மை, 4. மரபு, 5. பால், 6. ஊழ், 7. பான்மை, 8. பண்பு, 9. முறை, 10. உழுவல், 11. தகவு, 12. தகை, 13. இயல்வு, 14. குணம், 15. நுனித்தல், 16. உரிமை, 17. நிலமை, 18. நீர்மை, 19. பரிசு, 20. கிழமை, 21. விதி, 22. அதிகாரம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : பல்குணத்தின் பெயர், இயல்பின் பெயர்.

3 : 2 முறையியல்பு

4 : 1 நிலைமை

5 விதியதி கார மொருபொரு ளாகும். (205)

## 1550. இவை முழுதின் பொதுப் பெயர்

ஊழ்என் கிளவி இவை முழுதும் ஆகும்.



**இவை முழுதின் பொதுப்பெயர் : (1)**

ஊழ்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : ஊழென்னும் பெயர்.

3—4 யிவைமுழு தாகும், குணமுழு தாகும். (206)

## 1551. பண்பின் பெயர்

பண்பு நிறனும், குணனும் ஆகும்.

**பண்பின் பெயர் : (2)**

1. நிறன், 2. குணம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : பண்பென்னும் பெயர் ; குணத்தின் பெயர், குணமென்னும் பெயர். (207)

## 1552. கொள்கையின் பெயர்

குணனும், அறிவும், கொள்கை என்று ஆகும்.

**கொள்கையின் பெயர் : (2)**

1. குணன், 2. அறிவு.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : கொள்கையென்னும் பெயர். (208)

## 1553. தகையென்னும் பெயர்

தகையே இயல்பும் அழகும் ஆகும்.

**தகையென்னும் பெயர் : (2)**

1. இயல்பு, 2. அழகு. (209)

## 1554. உவமானத்தின் பெயர்

செத்து, பொரு, உறழ்வு, துலை, புரை, கடுப்பே,
துப்பு, துணைத்தல், துணை, அமர், நிகர், நேர்,
ஒப்பே, உவமானம்என்ன உரைப்பர்.

**உவமானத்தின் பெயர் : (13)**

1. செத்து, 2. பொரு, 3. உறழ்வு, 4. துலை, 5. புரை, 6. கடுப்பு, 7. துப்பு, 8. துணைத்தல், 9. துணை, 10. அமர், 11. நிகர், 12. நேர், 13 ஒப்பு.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு: உவமையின் பெயர், ஒப்பின் பெயர்.

செத்துப் பொருவுறழ் போல்புரை கடுப்பே
ஒப்புத் துணையிணை மான நிகர்நேர்
ஏய்ப்பே வுவமான மென்ன வுரைப்பர்.

என்றும் பாட வேறுபாடுண்டு.

3 : 1—2 ஏய்வுவமான. (210)

## 1555. நால்வகை உவமையின் பெயர்

வினையுவமம், பயனுவமம், மெய்யுவமம், உருவுவமம்
எனநால் வகைத்தே உவமத்து இயல்பே.

**நால்வகை உவமையின் பெயர் : (4)**

1. வினையுவமம், 2. பயனுவமம், 3. மெய்யுவமம், 4. உருவுவமம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு: உவமத்தின் வகைப்பெயர்.

2 : 3—4 உவமத் தியல்பு. (211)

## 1556. உவமமாவது

உவமம் ஒன்றோடு ஒன்றை ஒப்பு உறுத்தல்.

**உவமம் :**

ஒன்றோடு ஒன்றை ஒப்பு உறுத்தல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு: உவமம் என்னும் சொற்பொருட்பெயர், உவபமென்னும் பெயர். (212)



## 1557. திவாகரச் சேந்தன் பெருமை

மறக்குறம்பு ஒட்டி, அறத்தின்வழி நின்று,
கவிகைத் தண்ணளி புவிபெற ஆணையின்
ஐம்புலன் ஆறாம் அம்பர்க் கோமான்
திண்பெரும் சேந்தன் திவாகரத்து எட்டாவது
பண்பு பற்றிய பெயர்த்தொகுதி முற்றும்.

**பாடவேறுபாடு விளக்கம்**

3 : 3—4 அம்பற்கோமான்

5 : 3—4 பெயர்த்தொகுதி முற்றிற்று. (213)